AHARAM
# அகரம்
எண்: 11 எழுத்து: 03 மார்ச் - 2017 | ஜு.ஆகிர் 1438



“தாய் கறையான் 15 வினாடிகளுக்கு ஒரு முட்டை விகிதம் ஒரு நாளைக்கு 2000 வரையில் முட்டைகளை இடும். இராணிக் கறையான்களின் வாழ்நாள் 15 – 25 ஆண்டுகள் ஆகும். சூரா அந்நம்லில் சுலைமான் (அலை) அவர்களது சம்பவத்தில் எப்படி இராணி எறும்பு மற்றைய எறும்புகளுக்கு கட்டளை பிறப்பித்ததோ அவ்வாறே ஒரு திட்டமிடப்பட்ட ஆட்சி முறை கறையான்களிடமும் உள்ளது.”


பொதுசன நூலகம்
22 MAR 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# துடிப்புள்ள கறையான்கள்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை
50/-
www.aharam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக குடிநீர் தினம்
# மார்ச் 22




- 1992ம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மகாநாட்டில் செய்யப்பட்ட சிபாரிசையடுத்து மார்ச் 22 ஆம் திகதி உலக நீர் தினமாக ஐ.நா. பொதுச் சபை பிரகடனம் செய்தது.
- ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழ் உலக குடிநீர் தினம் நினைவுபடுத்தப்படுகிறது. 2017 ஆம் வருடத்திற்கான தொனிப்பொருள் கழிவு நீர் **(Wastewater)** என்பதாகும்.
- உலகத்தில் 97.5 சதவீதம் உப்பு சுவை கொண்ட நீர் உள்ளது. மீதமுள்ள 2.5 சதவீதம் சுத்தமான நீர். இதில் 2.24 சதவீதம் துருவ பகுதிகளில் பனிப்பாறைகளாகவும், பனிக்கட்டிகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள 0.26 சதவீத தண்ணீரைதான் குடிநீராகவும், விவசாயத்துக்கும் பயன்படுத்தும் நிலை உள்ளது.
- உலகளாவிய ரீதியில் பார்க்கும்போது நீரை அதிகமாகப் பயன்படுத்தும் துறை விவசாயமாகும். 85 சதவீதம் விவசாயத்துக்காக நீர் பயன்படுத்தப்படுகின்றது என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கைத்தொழில்த்துறை 10 சதவீதத்தைப் பயன்படுத்துகின்றது. எஞ்சிய 5 சதவீதமே வீட்டுப் பாவனைக்குரியது. எனவே, அருமையாக உள்ள வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையும்.
- உலக நாடுகளில் 40 சதவீத மக்கள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். பல கோடி மக்கள் நீர் பற்றாக்குறை உள்ள பகுதியில் வசிக்கிறார்கள். குடிநீர் மாசுபடுவதாலும், வறட்சியாலும் எதிர்காலத்தில் உலகம் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது.
- உலகில் பாதுகாப்பான நீரின்றி 8 செக்கன்களுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் உலகில் ஒரு கோடியே 50 லட்சம் குழந்தைகள் சாவதற்கு பாதுகாப்பற்ற குடிநீர் முதல் காரணமாக அமைகிறது. நீர் தொடர்பான நோய்களினால் இறப்பவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துக் கொண்டே போகிறது.
- உலகில் கிடைக்க கூடிய சொற்ப அளவு குடிநீரும் கழிவுகளால் மாசடைந்து வருகிறது. ஆண்டுதோறும் 40 ஆயிரம் தொன் கழிவுகள் நீரை மாசுபடுத்தி வருகின்றன. நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு நீர்வள ஆதாரங்கள் பாதிக்கப்பட்டு வருகிறது.
- நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டியது, நீர் ஆதாரங்களை காக்க வேண்டியது, குடிநீர் மாசுபடாமல் இருக்க உதவுவது மக்களின் சமுதாய கடமையாகும். தண்ணீர் மாசு படாமல் பாதுகாப்போம். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவோம். நீர்நிலைகளை பாதுகாப்போம். தண்ணீர் வீணாவதை தடுப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தாய் கறையான் 15 வினாடிகளுக்கு ஒரு முட்டை விகிதம் ஒரு நாளைக்கு 2000 வரையில் முட்டைகளை இடும். இராணிக் கறையான்களின் வாழ்நாள் 15 - 25 ஆண்டுகள் ஆகும். சூரா அந்நம்லில் சுலைமான் (அலை) அவர்களது சம்பவத்தில் எப்படி இராணி எறும்பு மற்றைய எறும்புகளுக்கு கட்டளை பிறப்பித்ததோ அவ்வாறே ஒரு திட்டமிடப்பட்ட ஆட்சி முறை கறையான்களிடமும் உள்ளது.**











AHARAM அகரம்

எண்: 11 - மார்ச் : 2017 - எழுத்து: 03






ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 20 |
| அரபு மொழி | 14 |





36


தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகளில் கவனம் தேவை

நாம் பயன்படுத்தும் வார்த்தைகளுக்கு மகத்தான சக்தி உள்ளது. அவைதான் எம்மைச் சூழ உள்ளவர்களை புன்னகைக்க வைக்கின்றன; சிலவேளை முகம் சுளிக்கவும் கவலைப்படவும் செய்து விடுகின்றன.

''எறிந்த கல்லையும் பேசிய வார்த்தையையும் மீளப் பெற முடியாது'' என்பார்கள். உண்மைதான், கவனக்குறைவாலும் பொடுபோக்காலும் ஆத்திர மேலீட்டாலும் சில சமயங்களில் நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் எம்மைச் சூழ உள்ளவர்களை வெகுவாகப் பாதித்து விடுகின்றன.

மாணவர்களாகிய நாம் வாழும் வட்டம் மிகவும் அழகானது; அற்புதமானது; ஆழமான அர்த்தம் கொண்டது. எமக்காக தம்மை விதைக்கும் பெற்றோர், நமக்காக பாடுபடும் ஆசிரியர்கள், நமது வெற்றிக்காக உழைக்கும் சமூக சேவகர்கள் என பல அழகிய உறவுகளை அல்லாஹ் எம்மைச் சூழ பூக்க வைத்துள்ளான். எமது வார்த்தைகள் அவர்களை துதிக்காவிட்டாலும் மிதிக்காமல் இருக்க வேண்டும்.

''யானைக்கும் அடி சறுக்கும்'' என்பது ஆன்றோர் வாக்கு. அதன் அடிப்படையில் மனிதர்கள் என்ற வகையில் எமது பெற்றோர், ஆசிரியர்கள் சில பிழைகளை விடலாம். அவை எம்மை நோகடித்திருக்கலாம். அவற்றை இங்கிதமாக சுட்டிக் காட்டுவதில் தவறில்லை. ஆனால், அப்போது பயன்படுத்தும் வார்த்தைகளில் அதி ஜாக்கிரதை அவசியம்.

தனது வார்த்தைகளால் அடுத்தவர்களின் மனதைக் காயப்படுத்தி மற்றவர்களின் வெறுப்பை சம்பாதிக்கும் மாணவன் ஒருவன் இருந்தான். யார் அவனது குறையை சுட்டிக்காட்டினாலும், ''நான் மற்றவர்களை காயப்படுத்தினாலும் பிறகு மன்னிப்பு கேட்டுக் கொள்வதால் என் மீது குற்றமில்லை'' என சாக்குப்போக்கு கூறி வந்தான்.

இதனை அவதானித்த அவனது தந்தை ஒரு சுத்தியலையும் ஆணிகளையும் அவனிடம் கொடுத்து, ''நீ உன் வார்த்தைகளால் அடுத்தவர்களின் மனதை நோகடிக்கும் ஒவ்வொரு தடவையும் வீட்டுக் கதவில் ஓர் ஆணியை அறைந்து கொள். பிறகு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டால் அதைக் கழற்றி எறி'' என வேண்டினார்.

அதனை அவனும் ஏற்றுக் கொண்டான். முதல் நாள் சுவரில் 24 ஆணிகள் அறைந்தான். மறுநான் 12, அடுத்தநாள் 20... ஆனால், நான்காவது நாளே தான் மனதை நோகடித்த அனைவரிடமும் சென்று மன்னிப்புக் கேட்டுவிட்டு கதவில் அறைந்திருந்த அனைத்து ஆணிகளையும் பிடுங்கி எறிந்து விட்டான்.

ஆனால், அதன் பிறகு கதவைப் பார்த்த அவன் அதிர்ச்சியடைந்தான். ஆணிகள் பிடுங்கப்பட்டாலும் கதவு சிதைந்திருந்தது. அதனை அவதானித்த அவனது தந்தை புன்னகையோடு சொன்னார்:

நாம் சொன்ன வார்த்தைக்கு மன்னிப்புக் கேட்பதால் மன்னிப்புக் கிடைக்கலாம். ஆனால், அந்த வார்த்தையால் ஏற்பட்ட காயம் மாறாது.

வார்த்தைகளில் அவதானமாக இருப்போம்.

அழகான வார்த்தைகள் எம் வாழ்வையும்

அழகாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அபூஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, ''எனக்கு உபதேசம் செய்யுங்கள்'' என்று கூறினார். அதற்கு நபி அவர்கள், ''நீர் கோபப்பட வேண்டாம்'' எனப் பதிலளித்தார்கள். அவர் மீண்டும் மீண்டும் கேட்டார். அதற்கு, ''நீர் கோபப்பட வேண்டாம்'' என நபியவர்கள் பலமுறை கூறினார்கள். (ஸஹீஹுல் புஹாரி)

அல்லாஹ்வின் தூதரவர்கள் தன்னிடம் வந்து உபதேசம் கேட்கின்றவர்களுக்கு அவர்களின் தன்மைக்கேற்ப அழகிய முறையில் உபதேசம் செய்வது அவர்களின் பண்புகளில் ஒன்றாகும்.

மனிதனுக்கு இருக்கின்ற இயல்பான உணர்வுகளில் ஒன்றே கோப மனப்பாங்காகும். எனினும், கோபம் ஷைத்தானுடைய தீய குணங்களில் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

கோபத்திற்கு எதிரான பண்புகளே பொறுமை, இரக்கம் மற்றும் மென்மைத் தன்மை போன்றவை. இப்பண்புகள் பூமியில் வாழ்கின்ற உயர்ந்த அல்லாஹ்வின் அடியார்களிடத்தில் காணப்படும் பண்புகளாகும்.

''(இறையச்சமுடையோர் எத்தகையோரென்றால்) அவர்கள் மகிழ்ச்சியான நிலையிலும் துன்பமான நிலையிலும் செலவு செய்வார்கள். மேலும், கோபத்தை அடக்கிக் கொள்வார்கள். மனிதர்களை மன்னிப்போராய் இருப்பார்கள். மேலும், அல்லாஹ் (இத்தகைய) நன்மை செய்வோரை நேசிக்கின்றான்.'' (ஆலுஇம்றான்: 134)

''பொறுமை மற்றும் ஆவேசப்படாமை ஆகிய இரு பண்புகள் உம்மிடம் உள்ளன. அவ்விரண்டையும் அல்லாஹ் நேசிக்கின்றான்'' என அஸஜ்ஜு அப்தில் கைஸ் என்ற ஸஹாபியிடம் நபியவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

இந்த அல்குர்ஆன் வசனம் மற்றும் ஹதீஸின் மூலம் பொறுமை, சகிப்புத்தன்மை என்பன அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரிய செயல்கள் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அல்லாஹ்வும் தன்னை அடையாளப்படுத்தும் போது தனது கோபத்தை இரக்கம் மிகைத்து விட்டது என்றும் அல்குர்ஆனில் 114 தடவைகள் றஹீம் என்றும் 57 தடவைகள் றஹ்மான் என்றும் அடையாளப்படுத்துகின்றான்.

ஒரு தடவை அல்லாஹ்வின் இல்லமான பள்ளிவாசலுக்குள் சிறுநீர் கழித்தவரை அடிப்பதற்காக கோபத்தோடு எழுந்த ஸஹாபாக்களை மென்மையைக் கடைப்பிடிக்குமாறு நபியவர்கள் உபதேசித்தமையும் நாம் அறிந்ததே.

இக்கோபத்தின் விளைவாக இன்று சமூக மட்டத்தில் பல பிளவுகளும் பிரச்சினைகளும் உருவெடுத்துள்ளன. சிலர் தான் ஒரு முன் கோபக்காரன் என கர்வத்தோடு சொல்கிறார்கள். இக்கொடிய கோபக் குணத்தை அடக்குமாறு மனிதனுக்கு இஸ்லாம் வழிகாட்டுகின்றது.

இங்கு நபியவர்கள், ''கோபம் கொள்ள வேண்டாம்'' என இம்மனிதருக்கு திரும்பத் திரும்பச் சொல்லியிருப்பதன் மூலம் அதன் பாரதூரம் எத்தகையதாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. அதுதான் உற்ற நண்பர்கள் எதிரிகளாகவும் குடும்பத்தவர்கள் பகைவர்களாகவும் மாறும் மோசமான நிலை.

'கோபநிலை என்பது பைத்தியம் பிடித்தவனின் நிலை' என முதியோர் கூறுவார்கள். ஏனெனில், கோபம் ஏற்பட்ட ஒருவன் தான் என்ன செய்யப் போகிறான் என்பதை அவனே அறிந்து கொள்வதில்லை. செய்யும் காரியத்தைச் செய்து விட்டு அவனது மனோநிலை மாறிய பின்பே கவலைப்படுகின்றான்.

பாடசாலை வாழ்விலும் அற்பமான காரணங்களுக்காக சிலர் நண்பர்களுடன் கோபித்துக் கொண்டு அவர்களுக்கு தீங்கும் செய்து விடுவதுண்டு. இந்நிலை பாதிக்கப்பட்டவரின் மனதில் ஆறாத வடுவாக மாறி, வாழ்நாள் முழுவதும் புகைந்து கொண்டிருக்கும் நிலை ஏற்படுகின்றது.

ஆகையால், எப்போதும் கோபம் என்ற ஷைத்தானின் மோசமான குணத்திலிருந்து விடுபட்டு, எச்சந்தர்ப்பத்திலும் பிறருடன் இரக்கத்தோடும் பொறுமையுடனும் உறவுகளைப் பேணுகின்றவர்களாக நாமிருக்க முயற்சிப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக இன்று முதல் இன்ஷா அல்லாஹ் தொடராகத் தர உள்ளோம்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# காபிலின் காகம்



பூமியில் உள்ள அனைத்தும் நரைத்து வெளுக்கும். ஆனால், காக்கைகளாகிய எங்களைப் போர்த்திய கறுப்பு மாத்திரம் எக்காலத்துக்கும் அதன் நிறத்தை இழக்காது.

ஆயினும், நாங்கள் சகித்துப் பொறுத்துக் கொண்டதை யாராவது அனுபவிக்க நேரிட்டால் பின்னர் ஒருபோதும் அவர்களுக்கு நரையே ஏற்பட மாட்டாது.

உலகில் முதலாவது நடந்த மனித கொலைப் பாதகத்தை நேரடியாகக் கண்ட ஒரே சாட்சி நான். முதலாவது மனித இரத்தம் பூமியில் ஓட்டப்படுவதை நான் கண்டேன்! கொலை செய்து ஓட்டப்பட்ட இரத்தம்! எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கின்ற இறைவன் இதனையும் அறிவான் என்பதும் எனக்குத் தெரியும்.

மிகவும் பயங்கரமான ஒரு நாளாக அது இருந்தது. இந்தக் கொலைக்கு மூல காரணமாக இருந்தவன் ஷைத்தான் ஆகும். அதனை நான் அறிந்திருந்தேன்.

ஷைத்தானின் வேலைகள் எவ்வளவு வித்திரமானவை!? எவ்வளவு இலகுவாக மனிதப் புதல்வர்கள் அவனது சதி வலையில் வீழ்ந்து விடுகிறார்கள்!

மனிதர்கள் இறைவனை நேசிக்கின்றார்கள். இருந்தும் அவர்கள் இறைவனை நிராகரிக்கின்றார்கள்; ஷைத்தானை அவர்கள் வெறுக்கின்றார்கள். ஆயினும், ஷைத்தானுக்கு அவர்கள் உடன்பட்டு விடுகிறார்கள். மனிதன் என்று அழைக்கப்படுகின்ற இந்தப் படைப்பு ஓர் அற்புதமாகவே எனக்குத் தோன்றுகிறது. அவனது அட்டகாசங்களை எவ்வாறுதான் சகித்துக் கொள்ள முடியும்? ஆயினும், இறைவன் மனிதர்களிடம் எவ்வளவு இரக்கமுடையவனாக இருக்கின்றான்!

தங்களைக் கடந்து போகின்ற துக்ககரமான நாட்களை மனிதன் வர்ணிக்கும் விதம் எப்படி என்று தெரியுமா? ''அவை காக்கைகளைப் போல கறுப்பாகும்'' என்று அவர்கள் கூறுகிறார்கள். காக்கைகளாகிய எங்களது கறுப்பு நிறம் மனிதர்களுக்குப் பிடிப்பதில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், மனிதனின் இருதயம் கறுத்து விட்டால் அது என்னிடம் இருக்கும் மிகவும் கறுத்த இறகை விடவும் கறுப்பாகவே இருக்கும்.

எங்களது தத்தல் நடையைப் பற்றியும் மனிதர்கள் குறை கூறுவார்கள். தீக்கனலின் மேல் நடக்கின்ற புத்தி பேதலித்த மனிதனைப் போல அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் சாய்ந்து சாய்ந்துதான் நாங்கள் நடப்போம். இதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இவ்வாறு நடை பயில்வது சற்று விசித்திரமாகத்தான் தோன்றும். இருக்கட்டுமே! வளைந்தும் சரிந்தும் நடக்கவே எங்களால் முடியும். மனிதன் தனது சகோதரனுக்கு செய்த மகா கொடுமையைக் கண்ட அதிர்ச்சியால் எங்களது கால்கள் வளைந்து போனதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

மனிதன் சிருஷ்டிக்கப்பட முன்பு பூமியில் சுதந்திரமாக கம்பீர நடை நடந்த கறுப்பு இராஜாக்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருந்தோம். பின்னர் ஒரு மனிதன் தனது சகோதரனையே கொலை செய்த அக்கிரமத்தை நாங்கள் கண்டோம். அந்தப் பயங்கரக் கொடுமையைக் கண்டு எங்களது கால்கள் விறைத்துப் போய் அன்று முதல் எங்களது பரம்பரைக்கே கால்கள் கோணிப் போய் விட்டன. இதுதான் சங்கதி!

காகத்தின் குரல் கேட்கும்போது அதனை மனிதர்கள் அபசகுனமாகக் கருதுகின்றனர். எங்களில் யாராவது சிலர், ஒரு வீட்டின் பக்கத்தில் இருக்கும் மரக்கிளையில் அமர்ந்து கொண்டு கரைய ஆரம்பித்தால் போதும். அதனை அபக் கேடாகக் கருதிக் கொள்வார்கள். காகங்களின் கரைச்சல் குயில்களின் கூவலைப்போல இனிமை இல்லைதான். ஆயினும், அது ஒன்றும் தீங்கை கட்டியம் கூறும் கூப்பாடு அல்ல. மனிதன் தானாகக் கற்பனை செய்து கொண்ட அர்த்தத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை! உண்மையில் மனிதனின் செயற்பாடுகளுக்கே அது பொருந்தும்.

மனிதன் சில சமயம் ஏதாவது தீய செயல்களைச் செய்து விட்டு ஒரு காக்கை கரைந்ததைக் காரணம் காட்டி அதுதான் அதற்குக் காரணம் என்று எங்கள் தலை மீது பழிபோட்டு விடுகின்றான்.

அந்தக் காலம் முதலே நாங்கள் கண்டு வந்த மனிதனின் வஞ்சகக் குணங்களில் ஒன்றுதான் இது. தான் செய்து விட்டு மற்றவரைக் குற்றம் சுமத்தும் கெட்ட குணம்.

❖ ❖ ❖

காகங்களுக்கும் நீதிமன்றங்கள் இருக்கின்றன. அந்த நீதிமன்றங்கள் சட்டங்களையும் விதிகளையும் உறுதியாகக் கடைப்பிடிப்பன. யாருக்கும் வளையாத, விலை போகாத நீதிஸ்தலங்கள்! இது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

சிலபோது ஒரு காகம் இன்னொரு காகத்தின் வீட்டைக் கொள்ளை அடிக்கும் அல்லது மற்றொரு காகத்தின் பெண்ணைக் கடத்திச் செல்லப் பார்க்கும். மற்றும் சிலவேளை காகம் பிஞ்சுக் குஞ்சுகளின் உணவைத் திருடித் தின்னும். அப்போது எங்களது காக நீதிமன்றம் உடனே கூட்டப்படும். இந்த ஒவ்வொரு குற்றத்திற்கும் வெவ்வேறு விதமான தண்டனைகள் உண்டு.

மற்றவரின் கூட்டை கொள்ளையிட்டால் நாங்கள் குற்றவாளியின் கூட்டை முற்றுகையிடுவோம். அவனை கூவி அழைப்போம். உடைத்த கூட்டை அவனைக் கொண்டு புதிதாக நிர்மாணித்துக் கொடுப்போம்.


மற்றவரின் மனைவியைக் கடத்தியவனை நாங்கள் அனைவரும் சேர்ந்து கொத்திக் கொலை செய்வோம்.

சின்னக் குஞ்சுகளின் ஆகாரத்தை தட்டிப் பறித்தவனுக்கு என்ன தண்டனை தெரியுமா? நாங்கள் கூட்டாகச் சேர்ந்து குற்றவாளியின் இறகுகள் ஒவ்வொன்றாய் கொத்திக் கழற்றுவோம். இறுதியில் சிறகொழிந்து சின்னக் குஞ்சுகள் போல பறக்க முடியாது தடுமாறும். சிலபோது அவனை எமது கூட்டத்தில் இருந்து சமூகப் பிரஷ்டம் செய்வோம்.

சாதாரணமாக ஒரு திறந்த மைதானத்தில் வைத்தே எமது நீதிமன்றத்தைக் கூட்டுவோம். எல்லோரும் ஒன்று சேர்ந்த பின்பே விசாரணை ஆரம்பமாகும். முதலில் வந்தவர்கள் மற்றவர்கள் வரும் வரை காத்திருப்போம். இவ்வாறு காத்திருப்பது சில சமயம் நாட்கணக்கிலும் தொடரும். வர வேண்டியவர்கள் அனைவர்களும் வந்து சேர்ந்து விட்டால் குற்றம் சாட்டப்பட்டவனை நாங்கள் நடுவில் நிறுத்தி அவனுக்கு முன்னும் பின்னும் காவலும் ஏற்படுத்துவோம். அதன் பின்னரே விசாரணை தொடங்கும்.

"கா...கா...கா..." எல்லோரும் கூட்டமாக குரல் எழுப்பத் தொடங்குவோம்.

வாதி தன்னுடைய வாதத்தை முன் வைப்பான். அவனுக்கு சார்பாக அவனது சாட்சிகள் குரல் எழுப்புவார்கள். சிறகுகளை அடித்து தங்களது கோபத்தை வெளிப் படுத்துவார்கள். இறுதியில் குற்றவாளி தலை தாழ்த்தி, சிறகு பணித்து, அமைதியாகி அடங்கி நிற்பான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டான் என்று இதன் அர்த்தம். அப்போது நீதிபதி தனது தீர்ப்பை வாசிப்பார். தீர்ப்பு வாசிக்கப்பட்ட உடன் அங்கு சேர்ந்த காக்கைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து குற்றவாளியைக் கொத்திக் குதறும். இறுதியில் குற்றவாளி கொல்லப்படுவான். இது முடிந்த உடனே சற்று நேரம் சேர்ந்து கரைந்துவிட்டு நாம் அங்கிருந்து புறப்பட்டு விடுவோம். குற்றவாளியின் சவம் யாராவது ஒருவனின் சொண்டுகளுக்கிடையே இருக்கும்.

கொலை செய்யப்பட்ட காகம் குற்றவாளியாக இருந்தாலும் அதனது இறந்த தேகத்துக்கு நாம் செய்ய வேண்டிய சில கடமைகள் உண்டு. இறந்த தேகத்துக்கு செய்ய வேண்டிய இறுதி மரியாதை. அதனை கண்ணியமாக அடக்கம் செய்ய வேண்டும். இதுதான் காகங்களின் சுபாவம். வாழ்க்கையிலும் மரணத்திலும் நாம் ஒன்றுபோல நீதி செலுத்து வோம். காகங்களிடம் இயல்பாகவே உறுதியாகவும் ஆக்ரோஷமாகவும் அமைந்தது நீதி. ஆயினும், மனித உலகம் இதற்கு முற்றிலும் மாற்றமானதாகும். மனிதர்களிடத்தில் நீதியையும் நியாயத்தையும் பெற்றுக் கொள்வது கடினமானதும் கிடைக்காத ஒன்றாகவும் இருக்கின்றது. காகங்களின் உலகில் அது இலகுவானதாகவும் உடனடியானதுமாகும்.

எங்களைப் பொறுத்தமட்டில், மாற்றமடையாத நிலையான சில அடிப்படையான விதிகள் உள்ளன. இந்த வரம்புகளை மீறுபவர்கள் சமூகக் கட்டமைப்பை சீர்குலைக்கின்றார்கள். எனவே, இவ்வாறானவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த விதிகளையும் சட்டங்களையும் காகங்களான நாங்கள் சுயமாக உண்டாக்கிக் கொள்ளவில்லை. இறைவன் எங்களது இயல்பி லேயே இயற்கையாக வைத்த பரம்பரையாக வரும் உணர்வுகள். நாங்கள் எங்களுக்காக எந்த சட்டத்தையும் சுயமாக உருவாக்குவதில்லை. எங்களது இச்சைகள் சட்டம் வகுப்பதில் அநீதி இழைத்து விடும் என்பதை நாங்கள் உணர்ந்திருக் கின்றோம். ஏனெனில், மனோ இச்சையானது தனக்கு இலாபம் தரும் பகுதிக்கு சார்பாகவே முடிவெடுக்கும். தனக்கு அற்பமானது மற்றவனுக்கு பாரதூரமானதாக கருதும். எங்களைப் படைத்த இரட்சகன் எங்களுக்கு அமைத்துத் தந்த சட்ட விதிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டதனால் மனோ இச்சைக்கு அடிமைப்படுவதை விட்டும் நாங்கள் தப்பி விட்டோம். காகங்களின் உலகில் மனோ இச்சைக்கு வழிப்படுவது குற்றமானதாகும். ஆயினும், மலாயிகாமார்களைத் தவிர மனோ இச்சைகளிலிருந்து முற்றாக பாதுகாக்கப்பட்ட யார்தான் உளர்?

மலக்குகளைப் பற்றிப் பேசும்போது படைப்பின் ஆரம்ப கட்டம் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

---

**குட்டிக் கதை**

# மகிழ்ச்சி என்பது என்ன?

*அவர் ஒரு பேரறிஞர். யாரிடமும் சண்டை சச்சரவு செய்யாமல் சமாதான விரும்பியாக இருந்தார். யாராவது வலிய சென்று அவரிடம் சண்டைக்கு இழுத்தால் கூட அமைதியாக இருந்தார்.*

*இதனைக் கண்டு ஆச்சரியப்பட்ட ஒரு முரடன் அவரிடம் வந்தான். "என்னால் யாரிடமும் சண்டை பிடிக்காமல் இருக்க முடியாது. ஆனால், நீங்கள் மாத்திரம் எப்படி யாரிடமும் சண்டை பிடிக்காமல் சாந்தமாக இருக்கின்றீர்கள்?" என தன் மனதில் உறுத்திக் கொண்டிருந்த சந்தேகத்தை வெளிப்படையாகக் கேட்டான்.*

*அதற்கு அவரோ "நீ கேட்கும் கேள்விக்கு பதில் சொல்வது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னும் 7 நாட்களுள் நீ சாகப் போகின்றாய். அதற்குள் உனக்கு இஷ்டமானதையெல்லாம் செய்து கொள்" என கூறி விட்டுச் சென்று விட்டார்.*

*அவனுக்கோ தலையில் பேரிடி!*

*'என்னமோ கேட்க வந்து என்னமோ நடந்து விட்டதே' என்று மௌனமாக சென்ற அவன் அதன் பிறகு யாரிடமும் சண்டை பிடிக்கவே இல்லை. யார் அவனோடு சென்று சண்டை பிடிக்க பார்த்தாலும் சாந்தமாக விலகி கொண்டான்.*

*அவனது மாற்றத்தைக் கண்டு ஆச்சரியப்பட்ட மக்கள் அவனை நேசிக்கத் துவங்கினர். இதனைக் கண்டு மனம் வருந்திய அவன் தான் இத்தனை நாள் அடுத்தவர்களுக்கு செய்த அட்டூழியங்களைக் கண்டு மனம் வருந்தினான்.*

*ஏழு நாட்கள் கடந்த பின்னரும் அவன் இறக்கவில்லை. அதனைப் பற்றி அவன் சிந்திக்கும்போதே அவனிடம் வந்த அறிஞர் "நீ ஏழு நாட்கள் கழித்து இறக்கப் போகிறாய் என்பதை அறிந்தவுடன் உன்னால் யாருடனும் சண்டை பிடிக்க முடியவில்லை."*

*"எப்போது மரணம் வரும் என்பதனை அறியாத நான் எப்படி அடுத்தவர்களுடன் சண்டை பிடிப்பது?"*

*உண்மையை உணர்ந்த அவன் மனம் வருந்தி திருந்தினான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைப் பெண் தந்த உபதேசம்

**எம்.ஏ. ரஹ்மான்**

பாரசீக சக்கரவர்த்தியான இப்றாஹீம் அத்ஹம் ஒருநாள் வேட்டையாடுவதற்காக அயலிலுள்ள காடு ஒன்றுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது ஓர் அடிமைப் பெண் அவருடைய படுக்கை அறைக்குள் வந்தாள். சக்கரவர்த்தி அங்கு இருக்கவில்லை. அழகிய வேலைப்பாடுகள் உடைய கட்டில், மெதுமையான பஞ்சணை, அத்தரின் நறுமணம் இவை அனைத்தும் ஓர் இனிய சூழ்நிலையை உருவாக்கி அவளை மயக்கின. அவள் ஆசையின் வசப்பட்டாள். மெதுவாக அந்த அரச கட்டிலிலே ஏறிப் படுத்துப் பார்த்தாள். சீக்கிரமே அவள் நித்திரையாகி விட்டாள்.

அவள், அவ்வாறு சக்கரவர்த்தியின் கட்டிலிலே துயின்றதைக் காவலாளிகள் கண்டு விட்டார்கள். வேட்டையிலிருந்து சக்கரவர்த்தி இப்றாஹீம் அத்ஹம் திரும்பியதும் இந்த விடயம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் கோபாவேசம் அடைந்த சக்கரவர்த்தி அந்த அடிமைப் பெண்ணுக்கு உடனேயே ஐம்பது சவுக்கடி கொடுக்கும்படி கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''துஷ்டப் பெண்ணே! இப்பொழுதாவது நீ செய்த தவறுக்காக வருந்துகின்றாயா?'' என்று சக்கரவர்த்தி இப்றாஹீம் பின் அத்ஹம் கேட்டார்.

''ஆம், அரசே! ஆனால், உங்களை நினைத்துத்தான் நான் அதிகம் வருத்தப்படுகின்றேன்'' என்று அடிமைப் பெண் கூறினாள்.

''ஏன் அப்படி ?'' எனச் சக்கரவர்த்தி கர்ஜனை செய்தார்.

''அந்தக் கட்டிலிலே ஒரு மணி நேரம் தூங்கியதற்காக இதுதான் தண்டனை என்றால், பல்லாண்டுகளாக அதிலே படுத்துறங்கும் உங்களுக்கு எத்தகைய தண்டனை வழங்கப்படும் என்பதை நினைத்துப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கிறது'' என்று அடிமைப் பெண் கூறினாள்.

அந்தப் பெண்ணுடைய இந்த வார்த்தைகள் அவர் தலை மீது திடீரென்று இடியேறு ஒன்று விழுந்ததைப் போன்ற அவதியை ஏற்படுத்தியது. சக்கரவர்த்தி ஸ்தம்பித்துப் போனார். அவருடைய முகம் வெளிறியது. அவர் குரல் நடுங்கத் தொடங்கியது. ''இந்தப் பெண்ணை அழைத்துச் சென்று நல்லபடியாக நடத்துங்கள். யோசிப்பதற்காக என்னைத் தனிமையில் விடுங்கள்'' என்று கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)*
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com



# துடிப்புள்ள கறையான்கள்



**அறிமுகம்**

பல்வேறு பண்புகளில் கறையான்கள் சிறப்புப் பெறுகின்றன. தோற்ற அமைப்பு, கூட்டமைப்பு, வாழ்க்கை முறை என நிறையக் கூறலாம். அல்லாஹ்வின் இச் சிறு படைப்பில் இருக்கும் மகத்தான அற்புதங்கள் என்னவென்று இத்தொடரில் கற்றுக் கொள்வோம். கறையான்கள் Termites என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றன. எறும்பு, தேனீ போன்று கறையான்களும் கூட்டமாக, சமூகமாக வாழும் பூச்சியின மாகும் (Social insect). கறையான்கள் (சம இறகிகள்) (Isoptera) என்ற வரிசையைச் சேர்ந்தன. (Iso) என்றால், 'ஒரே மாதிரி' என்றும் (Ptera) என்றால், 'இறக்கை' என்றும் பொருள். அதாவது, கறையான்களின் ஒரு வகையான ஈசல்களின் முன் மற்றும் பின் இறக்கைகள் ஒரே மாதிரி இருப்பதால், இந்தப் பெயர் வந்துள்ளது. கறையான்கள் வெள்ளை எறும்புகள் என்றும் அழைக்கப்படுகின்றன. காரணம் அவற்றின் வெளித்தோற்ற அமைப்புதான்.

**தோற்றமும் வகைகளும்**

எங்காவது உக்கிப் போயிருக்கும் ஒரு மரக் குற்றியைத் தூக்கிப் பாருங்கள். நிச்சயமாக அதன் கீழ் ஏகப்பட்ட கறையான்களைக் கண்டு கொள்வீர்கள். கறையான்கள் எறும்புகளைப் போன்று அளவில் சிறியவை. ஆனால், எறும்புகளிலிருந்தும் அவற்றின் வாழ்க்கை முறையிலிருந்தும் கறையான்கள் வித்தியாசமானவை. உடலின் இரு பக்கங்களிலும் மூன்று மூன்று வீதம் ஆறு கால்கள் காணப்படுகின்றன. ஒரு புற்றில் வாழும் சில கறையான்களுக்கு தலை பெரிதாகவும் உடல் சிறிதாகவும் இருக்கும். இன்னும் சிலவற்றுக்கு இது மறுதலையாக இருக்கும். கொட்டும் கொடுக்கிகளும் சிறகுகளும் மாறி மாறி இருக்கும். நிறம் கூட வெள்ளை நிறம், கபில நிறம் என்ற அமைப்பில் இருக்கும். அளவிலும் வித்தியாசமான பருமன்களைக் கொண்டிருக்கும்.

உலகம் முழுதும் கறையான்களில் சுமார் 275 பெரிய இனங்களும் சுமார் 2750 வகையான சிறிய இனங்களும் உள்ளன. இவற்றில் ஒரு சில சிற்றினங்கள், மரங்களில் மண் கூடு செய்து வாழும். அவை மரித்த மரங்களை, அரித்து தின்று விடும். அநேகமானவை மண்ணில் புற்று அமைத்து வாழும். கறையான்கள் கூட்டமாக வாழ்கின்றமையால் சாதாரணமாக ஒரு கூட்டத்தில் 500







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதல் 500,000 வரை கறையான்கள் இருக்கும். பொதுவாக ஒரு கூட்டத்தில் நான்கு வகையான கறையான்கள் இருப்பதை அவதானிக்கலாம். இராணிக் கறையான் (Queen), ஆண் கறையான் (King), சிப்பாய்க் கறையான்கள் (Soldiers) மற்றும் வேலைக்காரக் கறையான்கள் (Workers) என்பன வாகும். இவை ஒவ்வொன்றைப் பற்றியும் சற்று நோக்குவோம்.

**இராணிக் கறையான்**

ஒரு கறையான் கூட்டத்தின் முக்கிய கதாபாத்திரமே இவர்தான். ஒரு கூட்டத்தில் ஓர் இராணி மட்டுமே இருக்கும். இராணிக் கறையான் இல்லாமல் கறையான்கள் கூட்டம் சேர்வதில்லை. ஏனைய கறையான்களை விடவும் இராணிக் கறையான் அளவில் பெரியது. சம அளவிலான நான்கு இறகுகளும் இருக்கும். கறையான் புற்றுக்குள் இராணிக் கறையானுக்கு என ஒரு தனி அறை இருக்கும். அதில்தான் இராணி சொகுசாக இருப்பார். அவருக்கு வேளா வேளைக்குத் தேவையான உணவுகள் வேலைக்காரக் கறையான்களால் பகிரப்படும்.

ஆண் கறையானுடன் இணை சேர்ந்து கருக்கொண்ட இராணி 15 வினாடிகளுக்கு ஒரு முட்டை விகிதம் ஒரு நாளைக்கு 2000 வரையில் முட்கைளை இடும். இராணிக் கறையான்களின் வாழ்நாள் 15 - 25 ஆண்டுகள் ஆகும். கட்டளை பிறப்பிக்கும் அதிகாரத்தை இராணியே வைத்துள்ளது. அதன் கட்டளைக்கு அமைவாக ஏனைய கறையான்கள் பணியாற்றும். சூரா அந்நம்லில் சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது சம்பவத்தில் எப்படி இராணி எறும்பு மற்றைய எறும்புகளுக்கு கட்டளை பிறப்பித்ததோ அது போன்று. (அல்குர்ஆன் - 27:18) இப்படி ஒரு திட்டமிடப்பட்ட ஆட்சி முறையை கறையான்களிடம் உள்ளது.

**ஆண் கறையான்**

இராணிக் கறையானுடன் இணை சேருமளவுக்குத் தகுதி வாய்ந்த ஆண் கறையான் ஒன்றே இக்கூட்டத்தில் இருக்கும். அதற்கு இராஜாக் கறையான் என்பார்கள். இது தவிர மற்ற ஆண், பெண் கறையான்கள் எல்லாம் மலட்டுத் தன்மையுள்ளனவாக இருக்கும். சில சிற்றினங்களில் மட்டுமே, ஆண் கறையான் இறந்தால், மற்றோர் ஆண் கறையான், இராணிக் கறையானுடன் இணை சேரும். இராணிக் கறையானின் முட்டைகளிலிருந்து பொரிந்து வரும் குஞ்சுகளை, முதலில் ஆண் கறையான் பாதுகாக்கும். பின்பு கறையான்கள் பெருகியவுடன், குஞ்சுகளைப் பாதுகாக்கும் பணியினை வேலைக்காரக் கறையான்கள் செய்கின்றன. ஆண், இராணிக் கறையான்கள் எளிதில் வெளியே சஞ்சரிப்பதில்லை. அதனால் இவற்றைப் பார்ப்பதும் அரிதாகவே இருக்கும்.


**சிப்பாய்க் கறையான்கள்**

சிப்பாய்க் கறையான்கள்தான் புற்றை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் பணியைச் செய்கின்றன. ஏனைய கறையான்களிடமிருந்தும், எறும்பு, பல்லி, ஓணான், தேள் போன்ற எதிரிகளிடமிருந்தும் இவைதான் புற்றையும் தமது ஏனைய உறுப்பினர்களையும் பாதுகாக்கின்றன. சிலபோது எதிரிகளுக்கு இடையில் நடக்கும் போரில் அதிகமான சிப்பாய்க் கறையான்கள் இறக்கவும் நேரிடுகின்றன. தமது கூட்டத்தைப் பாதுகாக்க அவை உயிர்த் தியாகம் செய்து போராடுகின்றன. களத்தை விட்டு என்றும் பின்வாங்குவதில்லை. சிப்பாய்கள் குறைந்தால் உடனே அந்த இடத்தை நிரப்ப இராணிக் கறையான் முட்டைகளை இட்டு சிப்பாய்களை உருவாக்குகின்றது.

சிப்பாய்க் கறையான்களில் இரண்டு வகைத் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தும் கறையான்கள் உள்ளன. ஒன்று உடலைவிடப் பருத்த தலையுடன், வாயின் அருகில் அரிவாள் போன்ற இரண்டு கொடுக்குகளுடன் இருக்கும். இவை எதிரிகளைக் கொட்டி விஷத்தைக் கக்கி தாங்க முடியாத வலியை ஏற்படுத்தி அந்த இடத்தை விட்டு ஓடச் செய்யும். இவை (Manipulate Soldiers) எனப்படும் இரண்டாவது எதிரிகளின் மீது, துர்நாற்றம் மிக்க சுரப்பியினைத் தெளித்து விடும். இவை (Nasute Soldiers) எனப்படும். இதன் துர்நாற்றத்தை சிலபோது நீங்களும் அனுபவித்திருக்கலாம்.


**வேலைக்காரக் கறையான்கள்**

இவர்கள்தான் புற்றைக் கட்டுவதிலும் அதனை விஸ்தரிப்பதிலும் பராமரிப்பதிலும் பாடுபடுபவர்கள். மிகத் திறமை வாய்ந்த கட்டடக் கலைஞர்கள். தங்கள் உமிழ்நீரை மண்ணுடன் கலந்து அதனைப் பிசைந்து, பதப்படுத்தி






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






உருண்டை தயாரித்து புற்றைக் கட்டுவார்கள். அதன் உமிழ்நீரில் உள்ள இரசாயனக் கலவை எமது கையால் கூட இலகுவில் உடைக்க முடியாத புற்றுக்களை உருவாக்குகின்றது. புற்று எங்காவது சேதமடைந்தால் அதனை அறியும் ஒரு கறையான் தன் தலையை சுவற்றில் மோதி மற்ற கறையான்களை விழிப்படையச் செய்யும். உடனே அனைத்து வேலைக்காரக் கறையான்களும் அந்த இடத்தை சீரமைக்கும் பணியில் களமிறங்குகின்றன. வேலைக்காரக் கறையான்களில் இன்னுமொரு பகுதியினர் உணவு பரிமாறுபவர்களாகவும் இராணிக் கறையான் இடும் முட்டைகளையும் அதிலிருந்து வரும் குஞ்சுகளையும் பாதுகாக்கும் பணிகளையும் செய்கின்றன.

இந்த சிப்பாய் மற்றும் வேலைக்கார கறையான்களின் ஆயுள் காலம் ஒன்று முதல் இரண்டு வருடங்கள் வரைதான். மட்டுமன்றி, இவற்றுக்கு கண்பார்வையும் இல்லை. பார்வைச் சக்தியின்றி இவை எத்தகைய வேலைகளை எல்லாம் செய்கின்றனவென்று பாருங்கள். அல்லாஹ்வின் இல்ஹாம் எனும் முன் வழிகாட்டுதலின் அடிப்படையில் மிகக் கச்சிதமாக இவை பணியாற்றுகின்றன, சுப்ஹானல்லாஹ்!

**ஈசல்கள்**

ஈசல்கள் என்பதும் கறையான் வகையாகும். மழை காலங்களில் புற்றுகளிலிருந்து வெளிக்கிளம்பி வருமே அவைதாம். அல்லாஹ் அல்குர்ஆனிலும் ஈசலை (101:4) குறிப்பிடுகின்றான். இராணிக் கறையான் மார்ச், ஏப்ரல் பருவங்களில் அடுத்த இராணிச் சந்ததிகளை உருவாக்கவென்று பிரத்தியேக முட்டைகளை இடுகின்றது. அதிலிருந்து வெளிவருபவையே ஈசல்கள். சுமார் ஐந்து மாதங்களில் இவை பறக்கும் நிலைக்கு வளர்ந்து விடும். நன்கு மழை பெய்து புற்றும் பூமியும் நன்கு ஈரமானவுடன் புற்றின் மேல் பகுதியில் 2 CM நீளத்தில் பிறை வடிவில் வாயில்கள் அமைத்து இரவில் அவற்றை திறந்து வைத்து வாயிலில் ஏனைய கறையான்கள் வந்து ஈசல்களை வழியனுப்பக் காத்துக் கொண்டிருக்கும். பூமியில் நல்ல ஈரமும் சீரான காற்றும் நல்ல நிலா ஒளியும் உள்ள இரவில் ஈசல்கள் படை படையாக வெளியேற ஆரம்பிக்கின்றன. ஒரு புற்றிலிருந்து ஆயிரக்கணக்கான ஈசல்கள் வெளியேறும். அவற்றுக்கு சிறகுகள் இருப்பதால் இவை பறக்கின்றன. பின்பு சுற்றித் திரிந்து ஒரு நாளைக்குள் ஜோடி சேர்ந்து கொண்டு நிலத்தில் உள்ள வலைகளுக்குள் சென்று முட்டையிட்டு தனிக் கறையான் சாம்ராஜ்யத்தை உருவாக்கும் பணியை ஆரம்பிக்கின்றன.

ஆனால், வெளியேறும் எல்லா ஈசல்களாலும் இவ்வாறு செய்ய முடிவதில்லை. காரணம் புற்றிலிருந்து வெளியே வந்ததும் சிறகுகள் கழன்று, முட்டி, மோதி, பல்லி, உடும்பு, கோழி, வௌவால் என எதிரிகளால் வேட்டையாடப்பட்டு அதிகமானவை இறந்து விடுகின்றன. சிலது மட்டும் தான் புற்றுகளை உருவாக்குகின்றன. இது அல்லாஹ்வின் ஒரு கட்டுப்பாட்டுத் திட்டமிடலாகும். ஏனெனில், ஒரு நாளைக்கு பூமியின் புற்றுகளிலிருந்து வெளியேறும் ஈசல்கள் அனைத்தும் இறந்துவிடாமல் புற்றுகளை அமைக்குமென்றால் பூமியெங்கும் புற்றுக் காடாக மாறி விடும். இது வாழ்வின் சமநிலைத் தன்மையைப் பாதிக்கும். அத்தோடு, இதில் பிற உயிர்களுக்கு உணவையும் அவன் வைத்துள்ளான். எனவேதான், இந்த இறை ஏற்பாடு.

**கறையான்களின் உணவு**

கறையான்களின் பிரியமான உணவு காளான்கள் தான். அடுத்தபடியாக இறந்துபோன தாவரங்களின் கலங்கள் (செல்கள்). உயிருள்ள தாவரங்களை கறையான்கள் அரிப்பதில்லை. உலர்ந்த, உக்கிய மரங்களை அரிக்கும்போது அவற்றின் வாயில் சுரக்கும் ஒருவகை இரசாயனத் திரவம் மரத்தை மென்மையாக்குகிறது. அதனால் மரத்தை எளிதாக அரித்து சிறு சிறு துண்டுகளாக்க முடிகிறது. அவற்றை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைக்கிறது. பின்பு அவற்றின் மீது காளான்கள் முளைக்க ஆரம்பிக்கின்றன. அப்போது அவற்றை உணவாக உட்கொள்கின்றன.

**கறையான் புற்றின் அதிசயம்**

கண் பார்வை அற்ற கறையான்கள் புற்றுகளை நிர்மாணிப்பதில் வல்லவை. தாம் வாழும் சூழ்நிலைக்கேற்ப, தமது இடத்தைத் தேர்ந்தெடுக்கின்றன.

**38 ஆம் பக்கம் பார்க்க...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மாதுளையின்
## மருத்துவ குணங்கள்

நினைவாற்றல் பெருகும்
கொழுப்பு கட்டுப்பாட்டுக்குள் வரும்
செரிமான மண்டலம் சீராகும்
நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
மாதவிடாய் கோளாறுகளைச் சரி செய்யும்
நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புக் குறையும்
இதய நோய்களைத் தடுக்கும்

✍ எம்.ஆர். இல்ஹாம்
வள்பாளுவ மு.ம.வி.
கல்கமுவ

# வெற்றியின் திறப்புக்கள்

கண்ணியத்தின் திறப்பு - அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுதல்.
வாழ்வாதாரத்தின் திறப்பு - தக்வாவுடனும் இஸ்திஃபாருடனும் விரைதல்.
சுவனத்தின் திறப்பு - ஏகத்துவம்
ஈமானின் திறப்பு - அல்லாஹ்வின் படைப்புக்களைப் பற்றியும் அவனது அத்தாட்சிகளைப் பற்றியும் சிந்தித்தல்.
நன்மையின் சிறப்பு - உண்மை
உள வாழ்க்கையின் திறப்பு - குர்ஆனை ஆராய்தல், இரவில் அல்லாஹ்விடம் மன்றாடுதல், பாவங்களை விட்டு விடல்.
கல்வியின் திறப்பு - சிறந்த கேள்வி
உதவியின் திறப்பு - பொறுமை
வெற்றியின் திறப்பு - உள்ளச்சம்
மறுமையின் மீது ஆசை வைத்தலின் திறப்பு - உலகில் பற்றற்ற நிலை
விடையின் திறப்பு - துஆ

✍ பின்த் உஸ்மான்
ஹிந்தகொல்ல

# எமது சூழலை
## நாமே காப்போம்

எமது சூழலை எம்மைப் பாதுகாக்கும் கேடயமாக அமைத்துக் கொள்வது எமது பொறுப்பாகும். சூழல் மாசடையும்போது நாம் நோய்வாய்ப்பட நேரிடுகின்றது. எனவே, மாசற்றதொரு சூழலை உருவாக்கி அதில் வாழ்வதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொள்வதுதான் சுகதேகிகளாக நாம் வாழ வழிகோலும்.

சூழலை மாசுபடுத்தும் காரணிகளை நாம் அறிந்து கொள்வது மிக அவசியமானதாகும். பின்பு அவற்றை அடையாளம் கண்டு அப்புறப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடல் வேண்டும். இதில் வெற்றி பெற எமது சூழலில் எம்மோடு சேர்ந்து வாழ்வோருக்கு இதன் அவசியம் உணர்த்தப்படல் வேண்டும். இச்செயல்களால் எமது சூழல் சுத்தமடையும். எனினும், எம்மை அடுத்து வாழும் எமது அண்டை வீட்டார், அடுத்த தெருவில் வாழும் நண்பர்களது மாசு நிறைந்த சூழலானது எமது சூழலை மாசடையச் செய்யும் நிலைமை உருவாகும் அபாயம் ஏற்படலாம். இதனைத் தவிர்ப்பதற்காக நாம் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த ஒவ்வொருவருக்கும் மாசற்ற சூழல் பற்றிய விழிப்பூட்டலை மேற்கொள்ள வேண்டும். கூட்டாகச் செய்யும் இந்த முயற்சி ஓர் ஊரையே சுத்தமான சூழல் கொண்ட ஊராக மாற்றி விட முடியும்.

இவ்வாறான முயற்சிகள், நாம் பயிலும் கல்விக் கூடம், மதஸ்தலங்கள், மக்கள் கூடும் இடங்கள் மற்றும் பொதுப் பாதைகள் என்று சகல இடங்களிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனால் எமது சூழலின் பெரும் பகுதி சுத்தமடைய வாய்ப்பேற்படும்.

✍ எஸ்.ஏ. ஆமிர்
ஸஹிரா கல்லூரி
மாத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகின் முதன்மையான பத்து மொழிகள்

1. உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளின் பத்தாவது இடத்தில் இருப்பது பிரெஞ்சு மொழியாகும். உலகில் சுமார் 129 மில்லியன் மக்கள் இந்த மொழியை பேசுகின்றனர்.
2. அதிகம் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் 9 ஆவது இடத்தில் இருக்கும் மொழி, மலாய்-இந்தோனேசியன். சுமார் 159 மில்லியன் மக்கள் இந்த மொழியை பேசுகின்றனர்.
3. எட்டாவது இடத்தில் இருக்கும் மொழி போர்த்துக்கேய மொழி. இந்த மொழியை உலகில் சுமார் 191 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
4. பெங்காலி உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் ஏழாவது இடத்தில் உள்ளது. இந்த மொழியை 211 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
5. உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளில் ஆறாவது இடத்தில் இருக்கும் மொழி அரபு ஆகும். இதை 246 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
6. ரஷ்ய மொழி உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்த மொழியை 277 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
7. நான்காவது இடத்தில் இருக்கும் மொழி ஸ்பானிஷ் ஆகும். இந்த மொழியை உலகில் சுமார் 392 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
8. உலக மக்களால் அதிகம் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருப்பது ஹிந்தி மொழி. இந்த மொழியை உலகில் சுமார் 497 மில்லியன் மக்கள் பேசுகின்றனராம்.
9. நாம் அனைவரும் எதிர்பார்த்த ஆங்கில மொழி உலகில் அதிகம் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்த மொழியை உலகில் 508 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
10. மாண்டரின் மொழிதான் (சீன மொழி) உலகிலேயே அதிக மக்களால் பேசப்படும் மொழிகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இந்த மொழியை உலகில் சுமார் 1 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனராம்.

**நவீட் அஹமட்**
**திஹாரிய**

# முஸ்லிம்களுக்கு
## சில உபதேசங்கள்

- ❖ நிலைமை எப்படி இருப்பினும், அதான் ஒலி கேட்டவுடன் தொழுகைக்காக எழுந்து செல்.
- ❖ அல்குர்ஆனை ஓது, அதனைப் படி, அதனைச் செவியுறு அல்லது அல்லாஹ்வை திக்ர் செய். உனது நேரத்தின் ஒரு பகுதியேனும் பிரயோசனம் இன்றிக் கழிக்காதே.
- ❖ தெளிவான அரபு மொழியைப் பேசுதவற்கு முயற்சி செய். அது இஸ்லாத்தின் அடையாளங்களின் ஒன்றாகும்.
- ❖ எந்த விடயமாக இருந்தாலும் அதில் விவாதத்தை அதிகரித்து விடாதே. விவாதம் ஒரு நன்மையையும் தர மாட்டாது.
- ❖ அதிகம் சிரிக்காதே! அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்ட உள்ளமானது அமைதியாகவும் கண்ணியமாகவும் இருக்கும்.

**இல்ஹான் அஹமட்**
**சிறாஜிய்யா அ.க.**
**ஓட்டமாவடி**

# சுவையான தகவல்கள்

- ❍ உலகப் புகழ் பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
- ❍ எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்.
- ❍ ஒரு பென்சிலைக் கொண்டு 58 கி.மீ. நீளமான கோடு போடலாம்.
- ❍ நண்டிற்கு தலை கிடையாது; அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.
- ❍ சிலந்திப் பூச்சிக்கு எட்டுக் கண்கள் உண்டு.
- ❍ இறாலுக்கு இதயம் தலையில் இருக்கிறது.
- ❍ ஆப்கானிஸ்தானில் ரயில் கிடையாது.

**அயாத் அஹமட்**
**கு/அறக்கியாள மு.ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. உஹதுப் போரில் ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தலைக் கவசத்தில் எதிரிகளின் இரு வளையங்கள் பதிந்து விட்டன. இவற்றை விடுவிப்பதற்காக ஸஹாபிகள் இருவர் ஓடி வந்தார்கள். ஒருவர், ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். வளையங்களைப் பல்லால் கடித்து இழுத்து உடைத்து தனது இரு பற்களை இழந்த மற்றைய ஷஹாபியின் பெயர் என்ன?
2. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மகளார் ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் கருவுற்றிருந்த வயிற்றில் ஈட்டியால் குத்தி மரணத்துக்குக் காரணமாயிருந்தவரையே எம் பெருமானார் மன்னித்தார்கள். இவ்வாறு மன்னிக்கப்பட்ட வரின் பெயர் என்ன?
3. செயல் சார்ந்த அல்லது நடத்தை சார்ந்த தௌஹீத் எவ்வாறு அழைக்கப்படும்?
4. அறிவு சார்ந்த அல்லது நம்பிக்கை சார்ந்த தௌஹீத் எவ்வாறு அழைக்கப்படும்?
5. யாகூப் நபியவர்களின் தந்தையின் பெயர் என்ன?
6. தாலூத், ஜாலூத் ஆகிய இரு மன்னர்களுக் கிடையில் ஏற்பட்ட போரினால், தாலூத் மன்னன் சார்பில் போரிட்டுக் கொடியவன் ஜாலூத்தை கொன்றொழித்ததனால் மக்களின் கவனத்தை ஈர்த்தவர். பின்னர் மன்னன் தாலூத் இறந்த பின் அரசராகவும் அல்லாஹுத் தஆலாவால் நபியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலைக் கட்டுவதற்கு அத்திவாரமிட்டவர். இத்தனை பெருமைக்குரிய நபியின் பெயர் யாது?
7. 'அபூ ஹுரைரா' என்பதன் கருத்து என்ன?
8. நயவஞ்சகம் என்பதன் அரபுப் பதம் யாது?
9. நபிமாருக்கும் ரசூல்மாருக்கும் பொதுவாகக் காணப்படும் பண்புகள் எத்தனை? அவை யாவை?
10. அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஹிஜ்ரி 58 ஆம் வருடத்தின் ரமழான் மாதத்தில் இறையடி சேர்ந்தார்கள். அன்னாரின் ஜனாஸாத் தொழுகையைத் தொழுவித்த ஸஹாபியின் பெயர் என்ன?
11. 'இஹ்யாஉ உலூமுத்தீன்' நூலின் ஆசிரியர் யார்?

---

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் ஆரம்பக் கல்வியைக் கல்முனைக்குடி ஆண்கள் பாடசாலையில் கற்றபின் கல்வியைத் தொடர்ந்த பாடசாலை எது?
2. தெற்காசிய நாடுகளுள் எழுத்தறிவு வீதம் மிகவும் கூடிய நாடு எது?
3. கொழும்பில் முஸ்லிம் கல்விச் சங்கத்தை ஸ்தாபிப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?
4. அமெரிக்கா நீக்ரோ இன மக்களுக்காகப் போராடி உயிர் நீத்த நீக்ரோ இனத் தலைவர் யார்?
5. இலங்கை, இந்தியா உட்பட 36 ஆசிய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் சமாதானத்துக்கான ஆசியப் பாராளுமன்ற அமைப்பின் முதலாவது தலைமைப் பொறுப்பை ஏற்றவர் யார்?
6. சர்வதேச வீடமைப்பு ஆண்டு எது?
7. இலங்கையில் 'லங்கா ஸேக்ஸ்பியர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?

**விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## نُسَاعِدُ الْعَجَزَةَ இயலாதோருக்கு உதவுவோம்

كَانَ عَبْدُ اللهِ يَمْشِيْ مَعَ أَخِيْهِ فِيْ الشَّارِعِ، فَشَاهَدَ رَجُلاً أَعْمَى، يُرِيْدُ أَنْ يَنْتَقِلَ مِنْ يَمِيْنِ الشَّارِعِ إِلَى يَسَارِهِ، فَأَسْرَعَ إِلَيْهِ عَبْدُ اللهِ، وَأَخَذَ بِيَدِهِ وَأَوْصَلَهُ إِلَى يَسَارِهِ ثُمَّ رَجَعَ إِلَى وَالِدِهِ وَأَخْبَرَهُ بِمَا حَدَثَ فَقَالَ لَهُ أَبُوْهُ: أَحْسَنْتَ يَا عَبْدَ اللهِ وَصَنَعْتَ عَمَلاً جَمِيْلاً تُشْكَرُ عَلَيْهِ. وَكَانَ عَبْدُ اللهِ مَسْرُوْراً طَوَالَ ذَلِكَ الْيَوْمِ.

அப்துல்லாஹ் தனது சகோதரனுடன் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது பாதையின் வலப் பக்கத்திலிருந்து இடது பக்கம் கடந்து செல்ல விரும்பும் பார்வையற்ற ஒரு மனிதரைக் கண்டான். உடனே அப்துல்லாஹ் அப்பார்வையற்ற மனிதரிடம் விரைந்து சென்று அவரது கையைப் பிடித்து பாதையின் இடது பக்கம் கூட்டிச் சென்றான். பின்னர் அப்துல்லாஹ் தனது தந்தையிடம் சென்று நடந்ததை அறிவித்தான். அதற்கு அவரது தந்தை ''அப்துல்லாஹ்! நன்று, நீ நன்றி பாராட்டத்தக்க நல்லதொரு வேலை செய்திருக்கிறாய்'' எனச் சொன்னார். அப்துல்லாஹ் அந்த நாள் முழுதும் மகிழ்ச்சியுடன் இருந்தான்.

| | |
|---|---|
| مَشَى | நடந்து சென்றான் |
| أَذْهَبُ إِلَى الْمَدْرَسَةِ مَشْياً عَلَى الأَقْدَامِ | நான் பாடசாலைக்கு நடந்து செல்கிறேன் |
| اِنْتَقَلَ | நகர்ந்தான் |
| أَسْرَعَ | விரைந்து சென்றான் |
| صَنَعَ عَمَلاً | வேலை ஒன்றை செய்தான் |
| صَنَعَ مُحَمَّدٌ الشَّايَ | முஹம்மத் தேநீர் தயார் செய்தான் |
| الْيَمِيْنُ | வலது பக்கம் |
| الْيَسَارُ | இடது பக்கம் |
| أَنَا مَسْرُوْرٌ | நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன் |
| سَاعَدَ | உதவி செய்தான் |
| مُسَاعَدَةُ الْعَاجِزِ | இயலாதவருக்கு உதவுதல் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்குக.

| | |
|---|---|
| أَيْنَ كَانَ عَبْدُ اللهِ يَمْشِيْ ؟ | يَدُلُّ عَمَلُ عَبْدِ اللهِ عَلَى أَنَّهُ طَالِبٌ مُؤَدَّبٌ وَرَحِيْمٌ مَعَ الضُّعَفَاءِ. |
| مَعَ مَنْ كَانَ يَمْشِيْ فِيْ الطَّرِيْقِ ؟ | آخُذُهُ بِيَدِهِ وَأَمُرُّ بِهِ إِلَى جَانِبٍ آخَر. |
| مَنْ شَاهَدَ عَبْدُ اللهِ ؟ | قَالَ لَهُ أَبُوْهُ: أَحْسَنْتَ يَاعَبْدَ اللهِ وَصَنَعْتَ عَملاً مَشْكُوْراً. |
| مَاذَا أَرَادَ الرَّجُلُ ؟ | لاَ ، بَلْ رَجَعَ إِلَى وَالِدِهِ. |
| مَاذَا عَمِلَ عَبْدُ اللهِ لِلرَّجُلِ الأَعْمَى ؟ | أَخَذَ عَبْدُ اللهِ بِيَدِهِ وَأَوْصَلَهُ إِلَى يَسَارِ الطَّرِيْق. |
| هَلْ وَقَفَ عَبْدُ اللهِ مَعَ الأَعْمَى بَعْدَ العُبُوْرِ ؟ | أَرَادَ الرَّجُلُ الأَعْمَى أَنْ يَنْتَقِلَ إِلَى يَسَارِ الطَّرِيْقِ. |
| مَاذَا قَالَ لَهُ أَبُوْهُ ؟ | شَاهَدَ عَبْدُ اللهِ رَجُلاً أَعْمَى. |
| مَاذَا تَفْعَلُ إِذَا رَأَيْتَ طِفْلاً صَغِيْرًا يُرِيْدُ أَنْ يَعْبُرَ الطَّرِيْقَ ؟ | كَانَ يَمْشِيْ مَعَ أَخِيْهِ. |
| عَلَى أَيِّ شَيْءٍ عَمَلُ عَبْدِ اللهِ ؟ | كَانَ عَبْدُ اللهِ يَمْشِيْ فِيْ الطَّرِيْقِ. |
| مُسَاعَدَةُ الْعَاجِزِ | عَمَلٌ جَمِيْلٌ. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Assalamu alaikum dear friends,



Let me begin this issue by asking you all a question. So tell me friends as students what is your prime duty in this age???

hmmm I know almost all of you would have made that easy guess. And yeah you guessed right. It is of course "STUDYING".

As students your main focus should be only on studies and nothing else. Now that you know your task, it is easy for you to organize what are the things you should to do and what are the things you should not do.

Going to school regularly, attending tuition classes, helping your parents, studying at home are some of the things that you need to do. Attending wedding functions, visiting friends often and sitting in front of the computer and TV too long are obviously some things you must avoid.

I know that many of you are already aware of these things. But you find it hard to sit and focus on your studies isn't it?

All of us have this problem. When we keep on doing something that we are not interested in we get bored. In fact Allah (swt) has created us in such a way that we tend to get distracted very often. However Allah (swt) has also shown us the path of how to remain focused on our tasks. Alhamdulillah.

Let me give you some tips on how to remain focused on studies

First of all you need to put your trust in Allah and believe that whatever He does is always best for you. Therefore, focus on your goal and work hard for it and still if you did not get what you wanted then believe that Allah has some better plans for you.

- So, the next thing you need to do is to set up a study goal. It is, ask your selves why am I studying this and your answer will be your goal.
- Then you need to make a study time table and stick to the time table.
- Find a right place to study. My advice to you would be to avoid bedrooms.
- Turn of your mobile phones and especially stay away from TV and computer while you are studying.
- Know your priorities. Learn to say 'no' for certain things.
- Change topics. Do not remain on a particular subject for more than 2 hours.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Take regular breaks. This will refresh your brain.
- And finally give yourself a reward when you complete studying a particular topic

So, friends I hope you will take into consideration of what I have mentioned above and perform well in your studies and make your parents feel proud of you.

## Hadith of the month

The Prophet said, "A time will come when one will not care how one gains one's money, legally or illegally." Sahih Bukhari

## Your Corner

# SRI LANKA'S NATIONAL INDEPENDENCE DAY



Sri Lanka was under foreign Rule for more than 500years. National heroes fought against the rulers. Finally the English rulers decided to leave the country.

So, Sri Lanka got freedom on 4th February 1948. Every year we celebrate the National Independence Day to remember the National heroes. We celebrate the National day hoisting the National flag and singing the National Anthem.

*M. R. Ilham mohamed*
*Grade :10*
*Walpaluwa M. M. V*
*Galgamuwa*


## Laugh a while:



A guy shows up late for work. The boss yells, 'You should've been here at 8.30!' He replies. 'Why? What happened at 8.30?'

# Elephant

The largest land mammal on earth, the African elephant weighs up to eight tons. The elephant is distinguished by its massive body, large ears and a long trunk, which has many uses ranging from using it as a hand to pick up objects, as a horn to trumpet warnings, an arm raised in greeting to a hose for drinking water or bathing.Asian elephants differ in several ways from their African relatives. They are much smaller in size and their ears are straight at the bottom, unlike the large fan-shape ears of the African species. Only some Asian male elephants have tusks. All African elephants, including females, have tusks. Elephants are either left or right-tusked and the one they use more is usually smaller because of wear and tear. The Asian elephant has four toes on the hind foot and five on the forefoot, while the African elephant has three on the hind foot and five on the forefoot.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr Aafia Siddiqui

Dr.Aafia Siddiqui was born on 2nd March 1972. She is a Pakistani who studied neuroscience in the United States. She has been a role model and an inspiration for all the girls and women. She immigrated to the US in 1990 and obtained a Ph.D. from Brandeis University in 2001.She has 03 children named Ahamed,Sulaimaan and Maryam.

Aafiya Siddiqui founded the Institute of Islamic Research and Teaching as a nonprofit organization. She served as the organization's president. She attended a mosque outside the city where she stored copies of the Quran and other Islamic literature for distribution. She also helped establish the Da'wa Resource Center, a program that distributed Qurans.

Aafia siddiqui was accused as working for Al-Qaeda. In March 2003, she was named as a courier and financier for Al-Qaeda by Khalid Sheikh Muhammad and was placed on a "wanted for questioning" list by the American FBI. But actually she was not involved in Al-Qaeda rather she and her son had worked in an office in Pakistan, fund raising for poor people.

Many of Siddiqui's supporters, including some international human rights organizations, claimed that Siddiqui was not an extremist and that she and her young children were illegally detained, interrogated, and tortured by Pakistani intelligence, US authorities, or both, during her five-year disappearance. The US and Pakistan governments have denied all such claims.

Sidiqui was arrested on 2003 march 30 at Islamabad airport and was taken to Bagh-ram Jail, Afghanistan. Siddiqui was tortured by American soldiers in every possible ways. Seven years later, siddiqui was appeared to the world on 2010 September 03rd in court. American authorities did injustice to her, and she was sentenced to 86 years in prison .At the time of sentencing Siddiqui did not show any interest in filing an appeal, instead said that "I appeal to Allah and he hears me." After she was sentenced, she urged forgiveness and asked the public not to take any action in retaliation. Siddiqui is still alive today in prison.

Friends please pray for Dr.Aafia Siddiqui to be protected from American terrorists and to be released as soon as possible.

***Nuha Nizar***
***Amina Girls' Natinal, School***
***Matale.***

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்




தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் வேறு எவ்வித கிளைகளும் அற்ற மாபெரும் புத்தக நிலையமான இஸ்லாமிக் புக் ஹவுஸ் வெளியீட்டகத்தின் இன்னுமொரு புதிய அறிமுகம் அறிவலைகளுடன் வெளிவந்துள்ளது. உசாத்துணை கைநூலான ''புலமை ஆழி''

புலமைப் பரிசில் எழுதும் மாணவர்களின் நலன் கருதி தயாரிக்கப்பட்ட புலமை ஆழியானது மாணவர்களை இலகுவான முறையில் புலமை பரீட்சையில் சிறந்த மதிப்பெண்களை பெற்றுக் கொள்ள தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்களம், சுற்றாடல், நுண்ணறிவு, பல் தேர்வு வினாத்தாள்கள் மற்றும் ஆங்கில, சிங்கள வினாத்தாள்கள் என்பனவற்றை உள்ளடக்கிய இந்த உசாத்துணையானது அதன் மொழிநடையில் இலகுவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

நேத்ரா TV, SLBC, WAMAY விரிவுரையாளராக கடமையாற்றும் அனுபவமும் திறமையும் நுணுக்கமும் கொண்டுள்ள திறன்மிக்க I.L.M. ஸபான் ஆசிரியரால் எழுதப்பட்டு இந்நூல் இஸ்லாமிக் புக் ஹவுஸினால் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்நூல் அழகிய முன் அட்டையை தாங்கி நியாயமான விலையில் மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு வித்திட்ட வண்ணம் இஸ்லாமிக் புக் ஹவுஸ் விற்பனை நிலையத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்வதற்கு தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைநகரில் மட்டுமல்லாது, அதனை அடுத்து வாழும் மாணவர்களின் நலன் கருதி இப்புத்தகத்தை (புலமை ஆழி) பெற்றுக் கொள்ள எல்லா ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளன. எங்கள் வலைத்தளம் www.ibh.lk மூலமாகவும் தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**மேலதிக விபரங்களுக்கு**
இல. 77 தெமடகொட வீதி,
மருதானை, கொழும்பு 09.

**தொடர்புகளுக்கு:**
**0112 684851, 0112669191**

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. அபூ உபைதா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
2. ஹப்பார்
3. தௌஹீத் உலூஹியத்
4. தௌஹீத் ருபுவியத்
5. நபி இஸ்ஹாக் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
6. நபி தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள்
7. பூனைக் குட்டிகளின் தந்தை
8. நிபாக்
9. 13, உண்மை, நம்பிக்கை, விவேகம் (அஸ்ஸித்தீக், அல்அமானத், அல்பதானத்)
10. அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
11. இமாம் கஸ்ஸாலி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்

**பொது அறிவு**

1. கல்முனை உவெஸ்ஸிக் கல்லூரி
2. மாலை தீவு
3. அறிஞர் எம்.சீ. சித்திலெப்பை அவர்கள்
4. மாட்டின் லூதர் கிங்
5. ஷேக் ஹஸீனா
6. 1987
7. ஜோன் டி சில்வா

## எண்ணங்களின் வண்ணங்கள் - 20

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.


**தலைப்பு: பறவைக் கூட்டம்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 மார்ச் 25**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 16

## கண்டி இராச்சியத்தில் முஸ்லிம்கள்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

கம்பொள அரசு 1415 இல் முடிவடைந்ததைத் தொடர்ந்து கோட்டை அரசு எழுச்சியுற்றது. இக்காலப் பிரிவில் கோட்டை இராச்சியத்தின் ஒரு பகுதியாக கண்டி விளங்கியது. கண்டி இராச்சியத்துக்குப் பொறுப்பாக இருந்த ஜோதிய என்பவன் கோட்டை மன்னனுக்கு திறை செலுத்தாது சுதந்திரமாக செயற்பட விரும்பினான். அப்போது கோட்டை அரசனாக இருந்த 6 ஆம் பராக்கிரமபாகு அம்புலுகல இளவரசனின் தலைமையில் ஒரு படையை அனுப்பி இவனை அடக்கினான். எனினும், மாத்தளையில் வாழ்ந்த சேனாசம்பந்த விக்கிரமபாகு எனும் பிரபு 1469 இல் ஒரு கிளர்ச்சியை நடத்தி மலைநாட்டின் அதிகாரத்தைப் பெற்றான். அன்றிலிருந்து அது சுதந்திர அரசாகியது.

கண்டி இராச்சியம் சுதந்திர அரசாக இருப்பதைத் தொடர்ந்தும் விட்டுவைக்க விரும்பாத 1 ஆம் இராஜசிங்கன் சீதாவாக்கையோடு அதனை இணைக்க விரும்பினான். அதற்காக பல போர்களை நடத்தினான். ஈற்றில் 1582 ஆம் ஆண்டு அதில் வெற்றியடைந்தான். இந்நேரத்தில் கண்டி மன்னனாக இருந்த கரல்லியத்த பண்டார தனது குடும்பத்தோடு மன்னாருக்கு தப்பியோடி போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தான். கண்டியைக் கைப்பற்றிய 1 ஆம் இராஜசிங்கன் அதற்கு உதவிய வீர சுந்தர பண்டாரவை கண்டியில் தனது பிரதிநிதியாக நியமித்தான். பின் சிறிது காலத்தில் அவனை சந்தேகித்து கொலை செய்தான். இவனது மகனான கோணப்பு பண்டாரவும் போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்து கத்தோலிக்க சமயத்தைத் தழுவி டொன் ஜுவான் என தனது பெயரை மாற்றிக் கொண்டான்.

1592 ஆம் ஆண்டு டொன் ஜுவானின் தலைமையில் போர்த்துக்கேயரால் அனுப்பப்பட்ட படைக்கு கண்டி மன்னனின் ஆதரவு கிடைத்ததால் 1 ஆம் இராஜசிங்கன் தோல்வி அடைந்தான். இதில் வெற்றி பெற்ற டொன் ஜுவான் பின்னர் தனது பெயரை விமலதர்மசூரியன் என மாற்றிக் கொண்டு, கண்டி இராச்சியத்தின் மன்னனாக முடிசூடினான். 1594 இல் தந்துரை எனும் இடத்தில் நடைபெற்ற பெரும் போரே போர்த்துக்கேயருக்கும் 1 ஆம் விமலதர்மசூரியனுக்கும் இடையே நடைபெற்ற இறுதிப் போராக அமைந்தது. இதில் முழு வெற்றியடைந்த 1 ஆம் விமலதர்மசூரியன் கண்டி அரசின் சட்டபூர்வ உரிமையாளனானான்.

1 ஆம் விமலதர்மசூரியனின் காலப் பிரிவில் கண்டி இராச்சியத்தில் முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டன. எனினும், அவை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகமாக இருந்ததாக கருதுவதற்கில்லை. எனினும், 1 ஆம் விமலதர்மசூரியனின் கிழக்குப் பிராந்திய பாதுகாப்புப் பொறுப்பதிகாரியாக ஒரு முஸ்லிம் பிரபு இருந்துள்ளதையும் அவர் மன்னனிடத்தில் அதிக செல்வாக்குள்ளவராக இருந்துள்ளதையும் போல் ஈப்ரிஸ் எனும் வரலாற்று ஆசிரியரின் குறிப்புகள் காட்டுகின்றன. கி.பி. 1599 ஆம் ஆண்டு 1 ஆம் விமலதர்மசூரியனின் இராணுவக் கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்த கோபால வைத்திய வம்சத்தைச் சேர்ந்த முஸ்லிம் தளபதி போர்த்துக்கேயரால் கைது செய்யப்பட்டார். இவரை விடுவிப்பதற்கு 5000 கோடாக்கள் தருவதாக மன்னன் போர்த்துக்கேயருக்கு வாக்களிக்கும் அளவுக்கு இவர் முக்கியத்துவம் பெற்றிருந்தார். எனினும், இவரை விடுவிக்க விரும்பாத போர்த்துக்கேயர் மன்னனது வேண்டுகோளை மறுத்து இவரைக் கொலை செய்தனர்.

இத்தகவல் கண்டிய அரசின் ஆரம்பத்திலேயே முஸ்லிம்கள் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகிக்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தமையைக் காட்டுகின்றது. அதேபோல 1 ஆம் விமலதர்ம சூரியனின் அவைக் களத்தில் அரச வைத்தியராக ராஜகருண வேகம்பொல அவேகொட முதியன்ஸேலாகே சேக் ஸல்டீன் பின் அத்தாஸ் துபாய் உடையார் என்பவரும் பணிபுரிந்தார். 1 ஆம் விமலதர்மசூரியன் போர்த்துக் கேயரோடு போராடி கண்டி அரசை மிக உறுதியான அடித்தளத்தின் மீது நிர்மாணித்த பெரு மன்னனா வான். கி.பி. 1594-1604 வரையான 10 ஆண்டுகளே அவன் ஆட்சி செய்த போதிலும் மிகக் குறுகிய இக்காலப் பிரிவில் அவனது ஆழ்ந்த நம்பிக்கைக் கும் விசுவாசத்துக்கும் பாத்திரமாக முஸ்லிம்கள் இருந்துள்ளமை வியப்புக்குரியதாகும். தனது அரசும் ஆட்சியும் பெருத்த சவால்களை எதிர் கொண்டிருந்த நேரத்தில் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியாக ஒரு முஸ்லிமை நியமித் திருந்தமை மன்னன் முஸ்லிம்கள் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு சான்றாகும். அதேபோல, அவரை விடுவிக்க பெருந்தொகைப் பணத்தை போர்த்துக் கேயருக்கு வழங்க முற்பட்டமை மன்னனிடத்தில் அவருக்கு இருந்த பெறுமதியை உணர்த்துகின்றது.

1 ஆம் விமலதர்மசூரியன் 1604 இல் வாரிசு இன்றி மரணித்ததைத் தொடர்ந்து அவனது சகோதரனான செனரத் கண்டியின் அரசனாக முடிசூடினான். கி.பி. 1604-1635 வரை நிலவிய இம்மன்னனது காலம் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் குறிப்பிடத்தக்க காலப் பிரிவாக அமைந் தது. கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ் லிம்கள் போர்த்துக்கேயரால் பல தடவைகள் வெளியேற்றப்பட்டனர்.

கி.பி. 1622, 1623, 1624, 1626 ஆகிய ஆண்டு களில் இது நடைபெற்றது. 1622 இல் போர்த்துக் கேய தளபதியாக இருந்த கொன்ஸ்டைண் டி ஸொய்ஸா டி நொரன்ஹா இதனை கடுமையாக செயல்படுத்தினான். இவனது கடும்போக்குக் கொள்கையால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் களில் சிலர் இந்தியாவுக்குச் செல்ல, ஏனையோர் செனரத் மன்னனின் ஆட்சியின் கீழ் இருந்த கண்டி இராச்சியத்தில் புகலிடம் பெற்றனர். மன்னன் முஸ்லிம்களை வரவேற்று புகலிடம் அளித்து ஆதரித்தான்.

வரலாற்றுப் பேராசிரியை கலாநிதி லோனா தேவராஜா கண்டி மன்னன் முஸ்லிம்களை வர வேற்றமைக்கு பல காரணங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

1. தொடர்ந்து நடைபெற்ற போர்களினால் இழக் கப்பட்டிருந்த மனித வளத்தைப் பெறல்
2. விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டிருந்த மையால் அவற்றை மீள எழுப்பல்
3. பாரம்பரிய வணிகர்களாக முஸ்லிம்கள் இருந்த மையால் நலிவடைந்திருந்த பொருளாதாரத்தை மீள எழுப்பல்
4. சர்வதேச வணிக உறவுகளை வளர்க்க முஸ்லிம் கள் உதவுவர் என்ற நம்பிக்கை

மன்னன் செனரத் இந்நோக்கங்களுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 4000 முஸ்லிம்களை குடியேற்றினான். இப்பிரதேசத்தை வளப்படுத்திய முஸ்லிம்கள் அதனை விவசாய வளம் ஜொலிக்கும் பிரதேசமாக மாற்றி அமைத்தனர். இன்னும் இலங் கையின் நெல் உற்பத்தியில் கிழக்குப் பிராந்தியம் நிரம்பல் செய்யும் அளவு முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியத்துக்கு தக்க சான்றாகவே அமைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தியாகத்தின் அகராதி

''வாப்பாக்கு கடுமையாக சுகமில்லை மகள்...! ஒரு தடவை வந்து பார்த்து விட்டுப் போ!''

தொலைபேசியிலே உம்மா சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஷிம்ளாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தது போல் இருந்தது. மனப்பாரம் முடியும் மட்டும் படுக்கையில் புரண்டவாறு அழுது கொண்டிருந்தாள். ஆனாலும், சோகம் மட்டும் தீராமல் வந்து கொண்டே இருந்தது.

வீட்டை இழுத்து மூடி விட்டு, கணவனுக்கும் தொலைபேசியிலே அறிவித்து விட்டு அயல் வீட்டு ஷரீனாவோடு ஷிம்ளா புறப்பட்டாள். மனம் முழுக்க வாப்பாவின் நினைவுகளே ஆக்கிரமித்திருந்தன.

அப்போது ஷிம்ளாவிற்கு பதினான்கு வயது...

தான் கூலி வேலை செய்து சம்பாதித்து சேமித்திருந்த பணத்தில் அவளது வாப்பா ஒரு ஷல்வாரை வாங்கிக் கொடுத்திருந்தார். ஆனாலும், ஷிம்ளாவிற்கு தனது தோழிகள் பட்டாளம் எடுத்திருக்கும் பட்டாம்பூச்சி ஷல்வார் மீதுதான் கண்ணாக இருந்தது. ஆரம்ப நாட்களில் சாதாரணமாக முணுமுணுத்துக் கொண்டிருந்தவள், பெருநாள் நெருங்க நெருங்க தனக்குத் தான் விரும்பும் ஷல்வார்தான் வேண்டும் என அடம்பிடிக்கத் தொடங்கினாள்.

அவளது வாப்பாவிற்கு தனது மகளின் ஆசையை நிறைவேற்ற விருப்பம்தான். ஆனால், அந்த ஷல்வாரின் விலையை அறிந்தபோதுதான் வயிறு புகைந்தது.

பெருநாளைக்கு இன்னும் இரண்டு நாட்களே மீதமிருந்தன. தான் இஷ்டப்பட்ட ஷல்வார் கிடைக்குமா? கிடைக்காதா? என்ற சிந்தனையில் வகுப்பு முடிந்து தோழிகளோடு வந்து கொண்டிருந்தாள் ஷிம்ளா...! சற்றுத் தொலைவில் சிலர் பாதைகளை செப்பனிட்டு தார் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். அனலாய்க் கொதிக்கும் வெயிலில் கொதி நிலையின் உச்சக் கட்டத்தில் தகித்துக் கொண்டிருக்கும் தாரை கூலியாட்கள் பதறித் துடித்தபடி தூக்கிக் கொண்டு ஓடுவதைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

ஆ...! அங்கே...

ஷிம்ளாவின் வாப்பாவும் தனது கால்களில் சாக்கை சுற்றிக் கொண்டு வேலை செய்வதைப் பார்த்தபோது ஷிம்ளாவின் தலைக்குள் ஆயிரம் இடிகள் வெடித்துச் சிதறின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வாப்பா இவ்வளவு கஷ்டப்பட்டுத்தான் தங்களை காப்பாற்றுகிறாரா? என நினைத்துப் பார்த்தபோது அவளால் அழுகையை அடக்க முடியவில்லை. அதேநேரம், இவ்வாறு துன்பப்படுபவரிடம் ஷல்வார் கேட்டு அடம்பிடித்த தன்னை நொந்து கொண்டவளாக வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் ஷிம்ளா...

ஆனால்...

வீட்டில்...

அவள் கேட்டு அடம்பிடித்த அதே ஷல்வாரும் அவளுக்கு ரொம்பப் பிடித்த இனிப்புப் பண்டங்களும் அவளது வாப்பா

எப். ஸல்ஹா நஸீர்
அல்ஸபா ம.வி.
வத்தேகெதர, பொல்கொல்ல

அவளுக்காக வாங்கி வைத்திருந்ததைக் கண்டு...

வாப்பாவின் அன்பை நினைத்து அதே இடத்தில் உட்கார்ந்து அழத் துவங்கி விட்டாள்.

வழமை போலத்தான் அந்தப் பெருநாளும் கழிந்தது. புத்தாடைகள், இனிப்புப் பண்டங்கள் என... ஆனால், தனது வாப்பா மாத்திரம் பழைய சாரத்துடனும் வீங்கிய கால்களுடனும் எதையும் வெளிக்காட்டாத மெல்லிய புன்னகையுடனும் உலா வந்ததைக் கண்டபோதுதான் ஷிம்ளாக்கு தியாகம் என்றால் என்ன என்பது புரிந்தது.

அருகில் அமர்ந்திருந்த ஷரீனா ஆறுதலாக அணைத்தபோதுதான் தான் எங்கிருக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டாள் ஷிம்ளா. ஆட்டோ வீட்டை நெருங்க நெருங்க ஷிம்ளாவின் மனம் படபடக்கத் துவங்கியது.

வெறிச்சோடிப் போயிருந்த வீட்டின் முன் விறாந்தையில் உம்மாவும் தம்பியும் உட்கார்ந்திருந்தனர். ஷரீனாவும் வாசலோடு நின்று விட ஷிம்ளா மட்டும் உள்ளே சென்றாள்.

வாப்பா கட்டிலில் சாய்ந்திருந்தார். உடல் வற்றி எலும்புக் கூடுகள் துருத்திக் கொண்டிருந்தன. வாழ்நாள் முழுக்க மற்றவர்களுக்காக உழைத்து உழைத்தே நோயாளியாகி விட்டார். தனக்காக சேமித்த ஒற்றைச் சொத்து நெஞ்சுவலி மாத்திரம்தான்.

வாப்பா...! எவ்வளவு அற்புதமான உறவு! ஒன்பது மாதங்களோடு தாய் தன் பாரத்தினை இறக்கினாலும் இறுதி மூச்சு வரை வாப்பாதான் பாரத்தை இறக்குவதில்லையே! கோடியளவு பாசம் மனதில் பொங்கி வழிந்தாலும் அதிகம் பாசம் காட்டினாலும் எங்கே தன் தங்கங்கள் கெட்டு விடுவார்களோ என்ற பயத்தில் அத்தனையும் அடக்கிக் கொள்ளும் அப்பாவி ஜீவன்தானே தந்தை...!

ஷிம்ளா அருகே உட்கார வாப்பா மெதுவாக கண் திறந்து பார்த்தார். அவளது இரு கைகளையும் கோர்த்து தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்தவர் மௌனமாக புன்னகைத்தபடி மெதுவாக எழுந்து உட்கார்ந்து அருகே வைத்திருந்த ஒரு பொட்டலத்தைப் பிரித்தார்.

உள்ளே ஏதோ மங்கலாகத் தெரிந்தன.

''மகள்... காணி வித்த காசுல உனக்காக கொஞ்சம் நகைகள் வாங்கினேன். உனக்கு இந்த டிசைன் பிடிக்குமோ தெரியாது... கொஞ்சம் பார்க்குறியா?''

என்றவாறு அவர் அந்த... அந்த... பொட்டலத்தை நீட்ட...

''என் தங்க வாப்பா''

என கூறியபடி ஷிம்ளா பாய்ந்து அவரை கட்டிக் கொண்டாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இயற்கையை காயப்படுத்தாத இன்னொரு நவீன விஞ்ஞானம்

அயாத் அஹமட்

நேற்று இருந்த உலகம் இன்று இல்லை. இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகம் நாளை இருக்கப் போவதில்லை. நம்மால் கற்பனை காண முடியாத அளவு அற்புதமான உலகம் ஒன்றுதான் நாளை விடியப் போகின்றது.

உலகின் இந்த அபூர்வ மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் அன்றாட உலகின் அற்புத மாற்றங்களாகும். புதிய புதிய கண்டுபிடிப்புக்களால் இந்த உலகு நிமிடத்திற்கு நிமிடம் மாறிக் கொண்டிருக்கிறது.

ஆனால்,

இந்த கண்டுபிடிப்புக்கள் உலகின் புன்னகைக்கு மாத்திரமா காரணமாக அமைகின்றன? இந்த கண்டுபிடிப்புக்களால் உலகம் காயப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் உணர்கின்றோமா..? சில நவீன கண்டுபிடிப்புக்களின் நாசகார செயல்களினால் உலகின் ஒழுங்கு பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் உணர்கின்றோமா?

உண்மைதான். நவீனங்களால் உலகம் காயப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிதீவிர இயந்திர வாழ்வு உலகின் இயற்கையை விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், இயற்கையை எவ்விதத்திலும் மாசுபடுத்தாமல் நவீன கண்டுபிடிப்புக்களை உருவாக்க வேண்டும் என்ற உன்னத இலக்குடன் வலம் வரும் இளம் சாதனையாளருடன் மேற்கொண்ட உரையாடலை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

**அகரம்:** உங்களைப் பற்றிய அறிமுகமொன்றை வழங்க முடியுமா?

**எம்.என்.எம். நாஸிப்:** நான் எம்.என்.எம். நாஸிப் காலி வித்தியாலோக கல்லூரியில் **(vidyaloka college- galle)** தரம் எட்டில் கல்வி கற்கிறேன். இலத்திரனியல் வல்லுநராக வர வேண்டும் என்ற இலக்குடன் என் கல்விப் பயணத்தை ஆரம்பித்துக் கொண்டிருக்கிறேன். எனது தந்தை முஹம்மத் நாப் முஹம்மத் நிஸ்வர். விற்பனை முகவராக தொழிற்படுகின்றார். தாய் பாத்திமா மஹ்மூதா தனியார் பாடசாலை ஆசிரியையாக தொழில் புரிகிறார். எனக்கு ஓர் இளைய சகோதரரும் இருக்கின்றார். சொந்த இடம் வெலிகம (காலி)ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகரம்**: உங்கள் கண்டுபிடிப்பு பற்றி கூற முடியுமா?


**எம்.என்.எம். நாஸிப்**: மேலோட்டமான பார்வையில் எனது கண்டுபிடிப்பு ஒரு புல்வெட்டிதான். ஆனால், அதன் உருவாக்கத்துக்கான காரணியையும் அது தொழிற்படும் வழிமுறையையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

இந்த புல் வெட்டியில் அளவுக்கு மீறிய சத்தம் வராது. அதேபோல இதற்கு எரிபொருள் தேவையில்லை. கால் இல்லாதவர்களும் இயக்கக் கூடியது போல அமைக்கப்பட்டுள்ளது. ரிமோட் கொண்ட்ரோல் மூலமாகவும் இயக்கலாம். அதேபோல புற்களை நாம் விரும்பிய அளவில் வெட்டிக் கொள்ளலாம்.

புல் வெட்ட பல வகையான இயந்திரங்கள் இப்போது சந்தையில் காணப்பட்டாலும் அவற்றில் நான் அவதானித்த சில குறைபாடுகளே நான் இந்த இயந்திரத்தை உருவாக்க காரணமாக அமைந்தது.

அங்கவீனர்கள் கைநீட்டி யாசகம் கேட்கிறார்கள். ஆனால், இந்த இயந்திரம் இன்னும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு சந்தைக்கு வரும்போது அவர்களுக்கான ஒரு தொழில் வாய்ப்பாக இது அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

**அகரம்**: எவ்வாறு உங்களுக்கு இந்த ஆர்வம் ஏற்பட்டது?




**எம்.என்.எம். நாஸிப்**: சிறு வயதில் இருந்தே எனக்குள் இருந்த ஆர்வம்தான். என்னைக் கவர்ந்த எதனையும் செய்து பார்ப்பேன். ஒரு தடவை எங்கள் வீட்டுக்கு வந்து புல் வெட்டிய ஒருவரை கண்டவுடன் எனக்கு நானும் அவ்வாறான ஒரு கருவியை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அல்லாஹ்வின் அருளால் அதனை சாதித்தும் முடித்திருக்கின்றேன்.

கண்டுபிடிப்பு மாத்திரமின்றி எனக்கு அல்லாஹ் அன்புடன் அருளாக பல திறமைகளை தந்திருக்கிறான். அவற்றில் முக்கியமானது ஓவியம். அந்த துறையில் கல்வித் திணைக்களத்தின் சிறப்பு விருதையும் அடைந்திருக்கிறேன். அதேபோல புலமைப் பரீட்சையில் 170 புள்ளிகளை பெற்று சித்தியும் அடைந்திருக்கிறேன்.

முற்றாக கழிவு பொருட்களை பயன்படுத்தியே நான் இதனை செய்து முடித்தேன். எனது பெற்றோர் தந்த ஊக்கமும் ஆசிரியர்களின் வழிகாட்டலும் எனக்கு பேருதவியாக இருந்தன.

இதன் அடுத்த கட்டமாக எனது இந்த கண்டுபிடிப்பை இன்னும் சற்று மேம்பட்டதாக உருவாக்கும் பணிகளை இப்போது மேற்கொண்டிருக்கிறேன்.

இதற்காக தென் மாகாணத்தின் சிறந்த கண்டுபிடிப்பாளராக தெரிவு செய்யப்பட்டதுடன் SLAAS அரச கண்டுபிடிப்பாளர் போட்டிகளில் கலந்து பிரகாசித்ததுடன் கொழும்பு பல்கலைக்கழக கண்டுபிடிப்பாளர்களுக்கான நிகழ்விலும் பங்கு கொண்டேன்.


**அகரம்**: எங்கள் இளைய தலைமுறைக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**எம்.என்.எம். நாஸிப்**: இந்த உலகம் சாதனையாளர்களுக்கான களம். நாம் சராசரியாக வாழ்ந்து விட்டு செல்வதா...? இல்லை, சாதனையாளர்களாக உலா வருவதா? என்பதை தீர்மானிக்கும் உரிமை எம்மிடம் தரப்பட்டுள்ளது.

ஆற்றல்களை வளர்த்துக் கொள்வோம்; அகிலத்தை வெல்வோம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிமுகம் தேவைப்படாத நாடுகளில் அமெரிக்கா முதன்மையானது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், **United states of America, USA, US** என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அமெரிக்கா பல் வேறு காரணங்களாலும் சர்வதேசத்தில் பிரபல மாகியுள்ளது.

அமெரிக்காவின் பூர்வீக குடிகள் செவ்விந்தியர் கள். 500 ஆண்டுகளுக்கு முன் ஸ்பெயின், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து சென்ற மக்கள் செவ்விந்தியர்களை அழித்து அமெரிக்காவை தம் வசப்படுத்தினர். அதேபோன்று, அமெரிக்காவின் பரந்த நிலங்களில் வேலை செய்ய ஆபிரிக்கர்களை கடத்திக் கொண்டு வந்து அடிமையாக நடத்தினர். அதேபோல, உலகில் அதிகமான யுத்தங்களை நடத்தி பல திக்கு களிலும் இரத்த ஆறுகளை ஓடச் செய்துள்ளனர்.



ஜனாதிபதி
டொனால்ட் ட்ரம்ப்

**தலைநகரம் - வொஷிங்டன்**

**பெரிய நகரம் - நியூயோர்க்**

**தேசிய மொழி - ஆங்கிலம்**

**குடியரசு தலைவர் - டொனால்ட் ட்ரம்ப்**

**விடுதலை நாள் - 3 செப்டெம்பர் 1783**

**குடியரசு தினம் - 21 ஜூன் 1788**

**பரப்பளவு - 98,26,630km²**

**மக்கள் - 306 மில்லியன்**

### சாதனைகள்

ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்திற்கு முக்கிய காரணமாக அமைந்த அமெரிக்கா உல கின் பல்வேறு நாடுகளின் தலைவிதிகளைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய நாடாகக் காணப்படு கின்றது. உலகின் மிகப் பலம் வாய்ந்த ஊடக பலம், வணிக பலம், இராணுவ பலம் என முக்கிய காரணிகள் அமெரிக்காவின் இந்த செல்வாக்கிற்கு காரணமாக அமைகின்றன.

### புவியியல்

50 மாநிலங்களைக் கொண்டதாக அமெரிக்கா அமைந்துள்ளது. ஒன்றுசேர 48 மாநிலங்களும் கனடாவின் அருகே அமைந்துள்ள அலாஸ்கா மாநிலமும் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள ஹவாய் தீவுகளும் இவற்றில் உள்ளடங்கும். சம அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள இந்த மாநிலங்களைக் குறிக்கத்தான் தேசிய கொடியில் 50 நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆவார். பிரபல வர்த்தகரான இவர், பல சர்ச்சைக்குரிய சட்டங்களை இயற்றி உலக நாடு களின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளமை நாம் அறிந்ததே.

# அமெரிக்கா

## (முகவரி தேவைப்படாத தேசம்)

## AMERICA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்:

சிறுவர்களின் ஆற்றல்களை ஊக்குவித்தல், அவர்களது ஆற்றல்களுக்கு களம் அமைத்தல், அவர்களது சிந்தனைகளை இஸ்லாமியமயப்படுத்தல், மாணவர்களது பாடசாலைக் கற்றலுக்கு மேலதிக உள்ளீடுகளை வழங்குதல், புதிய புதிய தகவல்களை வழங்குவதன் ஊடாக மாணவ வாசகர்களை வலுவூட்டுதல், 5ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழிகாட்டலை வழங்குதல் முதலான இலக்குகளைக் கொண்டதாக அகரம் மாணவர் சஞ்சிகை 2005 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது.

## சந்தா விண்ணப்பப் படிவம்

JUST MEDIA FOUNDATION

அல்ஹஸனாத் | எங்கள் தேசம் | அகரம் | ප්‍රබෝධය | The Trend

Subscription Form

Receipt No:

Date:

Name: ........................................

Address: ........................................

........................................

Tel: ..................... Mob: .....................

E-mail: ........................................

Profession: ........................................

**PAYMENT DETAILS**

| | 6 Month | Per Year |
|---|---|---|
| Alhasanath | 425.00 | 850.00 |
| Aharam | 400.00 | 800.00 |
| Prabodaya | 350.00 | 700.00 |
| The Trend | 1125.00 | 2250.00 |

சந்தாக்களை அனுப்ப JMF என்ற பெயருக்கு **MONEY ORDER** எடுத்து தபாலகம் **DEMATAGODA** என குறிப்பிட்டு அனுப்பவும்.

வங்கியில் வைப்பிலிட நாடுவோர் **Just Media Foundation, A/C NO: 79088651, Bank of Ceylon, MARADANA.** எனும் வங்கிக்கணக்கில் குறித்த தொகை பணத்தை வைப்பிலிட்டு உரிய பற்றுச்சீட்டை **77, SRI VAJIRAGNANA MW, COLOMBO -09** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Just Media Foundation
77, Sri Vajiragnana Mw, Colombo -09
Tel: 011 2689324 | Fax: 0112686030
Email: jmflanka@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ADVERTISEMENT TARIFF

| Pages | ALHASANATH | | AHARAM | | PROBODAYA | | TREND | | ENGAL THESAM | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT | SIZE | AMOUNT |
| FRONT | - | - | - | - | - | - | - | - | (TOP 2" X 4") | 3,000.00 |
| | | | | | | | | | (BOTTOM 2" X 10.5") | 5,000.00 |
| BACK | (10" X 7") | 60,000.00 | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (9.6" X 7") | 30,000.00 | (HALF 8" X 10.5") | 15,000.00 |
| | | | | | | | | | (QUARTER 8" X 5") | 7,500.00 |
| FRONT IN | (10" X 7") | 40,000.00 | (10" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | - | - |
| BACK IN | (10" X 7") | 40,000.00 | (7" X 7") | 20,000.00 | (10" X 7") | 15,000.00 | (9.6" X 7") | 20,000.00 | | |
| **INNER PAGES** | | | | | | | | | | |
| FULL | (9.4" X 7") | 20,000.00 | (9.4" X 6.5") | 12,000.00 | (9.4" X 6.5") | 10,000.00 | (8.6" X 6.2") | 15,000.00 | - | - |
| HALF | (4.7" X 7") | 10,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.7" X 6.5") | 6,000.00 | (4.3" X 6.2") | 8,000.00 | (8" X 10.5") | 10,000.00 |
| QUARTER | (4.7" X 3.5") | 6,000.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.7" X 3.2") | 3,500.00 | (4.3" X3.1") | 4,000.00 | (8" X 5") | 5,000.00 |
| COLUMN | (2" X 3.5") | 3,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.2") | 1,500.00 | (2" X 3.1") | 2,000.00 | (2" X 5") | 2,500.00 |
| COLUMN | (2" X 7") | 4,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.5") | 3,500.00 | (2" X 6.2") | 4,000.00 | (2" X10. 5") | 4,500.00 |

**தொடர்புகளுக்கு: 0778942217 / 0112689324**

**JUST MEDIA FOUNDATION**

**NO 77, SRI VAJIRAGNANA MAWATHA, COLOMBO-09**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் 01

அப்பாஸ் இப்னு பிர்னாஸ்

# வான்வழிப் போக்குவரத்தின் முன்னோடி

■ ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம் ■





அப்பாஸ் இப்னு பிர்னாஸ் (மேற்குலகில் ஆர்மன் பிர்மன் என்ற பெயரில் அறியப்படுகிறார்) எனும் பல்கலை வல்லுநர் இஸ்லாமிய ஆட்சியின் கீழிருந்த ஸ்பெயினில் பிறந்தவர். இவர் பல்வேறு கண்டுபிடிப்புக்களுக்கும் கருவிகளின் உருவாக்கத்திற்கும் புகழ் பெற்றிருப்பினும் இவரது பறக்கும் கருவி இவரை தனித்துவமாக அடையாளம் காட்டுகிறது எனலாம். ரைட் சகோதரர்களின் வெற்றிகரமான வான்வழிப் போக்குவரத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சரித்திரப் புகழ்வாய்ந்த வான்வழிப் போக்குவரத்து உபகரணத்தை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

ரைட் சகோதரர்கள் தங்களது அரிய கண்டுபிடிப்பான விமானத்தை வானில் செலுத்துவதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இஸ்லாமிய கவிஞரும் வானியல் நிபுணரும் பொறியியலாளரும் பல்கலை வல்லுநருமான அப்பாஸ் இப்னு பிர்னாஸ் என்பவர் விமானத்தின் மூல வடிவமான பல்வேறுபட்ட பறக்கும் கருவிகளை வானில் செலுத்தி விரிவான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். இவர் கி.பி. 852 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதிகளில், இடையிடையே கடினமான தடிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பறக்கும் மேலங்கியை அணிந்தவாறு, ஸ்பெயினின் கோர்தோபாவிலுள்ள பள்ளிவாசலின் உயரமான மினாராவிலிருந்து குதித்து முதன் முதலில் பறக்கும் தொழில்நுட்பத்தில் வெள்ளோட்டம் பார்த்தார். இத்துணிகர முயற்சியின்போது அப்பாஸ் இப்னு பிர்னாஸுக்கு உடலில் காயங்கள் ஏற்பட்டதுடன் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியும் கிட்டவில்லை.

இருப்பினும், அவரது வெற்றியை நோக்கிய பயணத்தை, விடாமுயற்சியை இந்நிகழ்வு துளியும் அசைத்து விடவில்லை. இடையறாத முயற்சியின் இறுதியில் தனது 70 ஆவது வயதில் சில்க் துணி மற்றும் கழுகின் இறகுகளைக் கொண்டு பின்னப்பட்ட பறக்கும் செயற்கை சிறகுகளை உருவாக்குவதில் அப்பாஸ் இப்னு பிர்னாஸ் வெற்றி கண்டார். பறக்கும் செயற்கை சிறகுகளின் துணையுடன் மலையுச்சியிலிருந்து குதித்து வானில் சுதந்திரமாக பத்து நிமிடங்களுக்கும் மேலாக பறந்து திரிந்தார்; வான்வெளியில் மிதந்தார். சுமுகமான தரையிறக்கத்திற்கும் செயற்கை சிறகுகள் பெரிதும் துணை புரிந்தன. இச்சாதனை மனிதரை கௌரவிக்கும் பொருட்டு, பக்தாத் சர்வதேச விமான நிலையம் மற்றும் சந்திரனின் நிலாக்குழி என அழைக்கப்படும் பள்ளமான இரண்டு பிரதேசங்களுக்கு 'அப்பாஸ் இப்னு பிர்னாஸ்' என பெயரிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் 6-11
தொடர் : 18

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

## பாடம் 12

கணினி அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் மிக முக்கியமானது. இன்று ஒருவரின் கல்வி அறிவு அவன் பெற்றிருக்கும் கணினி அறிவின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. கணினி அறிவைப் பெற்றவன் சமூக சூழ்நிலையில் அங்கீகாரம் உடையவனாகவும், தொழிநுட்ப உலகில் வேகமாக முன்னேறக் கூடியவனாகவும் காணப்படுவான். எனவேதான், அரசு அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் தொழில்களுக்கான போட்டிப் பரீட்சைகளின்போது கணினி அறிவு முக்கிய அம்சமாக பரீட்சிக்கப் படுகின்றது. பொது அறிவு என்ற பகுதியில் கணினி பற்றிய தகவல்கள் வெகுவாக வினவப்படுவதை கிட்டிய கடந்தகால போட்டிப் பரீட்சை வினாத் தாள்களில் கண்டு கொள்ள முடிகின்றது. எனவே, மாணவர்கள் கணினி சார் பொது அறிவை பெற்றுக் கொள்வது முக்கியமானது என நாம் நம்புகின்றோம்.

## கணினி சார் பொது அறிவு

1. இறுவட்டைக் (CD) கண்டுபிடித்தவர் - ஜேம்ஸ் ரஸ்ஸல்.
2. (WWW) World Wide Web எனும் இன்டர்நெட் தாரக மந்திரத்தை உருவாக்கியவர் - திம் பெர்னர்ஸ்-லீ
3. "Your Potential Our Passion" என்ற வாக்கியத்தை சார்ந்த நிறுவனம் - மைக்ரோசொப்ட்
4. கிரிக்கெட் பந்தின் வேகத்தை அளக்க பயன்படுத்தப்படும் தொழிநுட்பம் - ஹாக் ஐ (Hawk Eye)
5. C++ எனும் கணினி மொழியை வடிவமைத்தவர் - பியான் ஸ்ட்ரு ஸ்டெரெப்.
6. Computer Tabulating and recording Company என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கப்படுகின்ற பெயர் - IBM
7. Uniform Resource Location என்பதன் சுருக்கம் - URL
8. Vital Information Resources Under Seas எனும் கணினி வார்த்தையின் சுருக்கம் - VIRUS
9. World wide Web எனபதன் துவக்க கால பெயர் - EnQuire
10. அப்பிள் கணினியைத் துவக்கியவர்கள் - ஸ்டீவ் ஜொப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக்
11. நோபல் பரிசு (Nobel Price) பெற்ற ஜான் பார்டீனின் முக்கிய கண்டுபிடிப்பு - டிரான்சிஸ்டர்
12. இன்டர்நெட்டின் தந்தை என அழைக்கப்படுபவர் - வின்ட் ஸர்ஃப்
13. உலக கணினி எழுத்தறிவு தினம் கொண்டாடப்படுவது - டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி
14. Center for Development of Advanced Computing என்பதன் சுருக்கம் - C-DAC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உலகின் முதல் கணினி விளையாட்டு - Space War

16. உலகின் முதல் மடிக்கணினி அழைக்கப்பட்ட பெயர் - Dynabook

17. உலகின் முதல் Micro Processor - இன்டெல்

18. கணினி மவுஸை (Computer Mouse) கண்டுபிடித்தவர் - மக்ளஸ் எங்கன்பர்ட்

19. கணினி வடிவை சிறிதாக்கிய IC சிப்பைக் கண்டுபிடித்தவர் - ஜாக் கில்பி

20. கணினி வன் தட்டின் (HARD DRIVE) தந்தை - ரே ஜொன்ஸன்

21. கணினியின் முக்கிய circuits அமைக்கப்பட்டுள்ள பகுதி - மதர் போர்ட்

22. கணினியின் ஈதர் நெட்டை (Ether NET) கண்டுபிடித்தவர் - ராபர்ட் மெட்காஃப்

23. கூகுள் தேடுபொறியை உருவாக்கியவர்கள் - லாரிபேஜ், ஸ்ர்ஜி ஃப்ரின்.

24. கேமரா மொபைல் ஃபோனை (Camera mobile phone) கண்டுபிடித்தவர் - ஃபிலிப் கான்

25. தனது 20 ஆம் வயதிலேயே லினக்ஸ் உருவாக்கிய விஞ்ஞானி - லினஸ் தோர்வாட்ஸ்

26. பிரபல விக்கிபீடியா வெப்சைட்டை உருவாக்கியவர் - ஜிம்மி வேல்ஸ்

27. பிரபலமான (Dos) எனப்படும் கணினி நிரலை உருவாக்கியவர் - டிம் பாட்டர்ஸன்.

28. பிரபலமான பேஜ் மேக்கர் எனும் வெளியீட்டு மென்பொருளை (Publishing Software) உருவாக்கியவர் - ஃபால் பிரெயினார்ட்.

29. பெண்டியம் புராசஸர்களின் தந்தை (The father of the Pentium processors) - வினோத்

30. மிக வேகமான சூப்பர் கணினிகள் அழைக்கப்படும் பெயர் - ''ப்ளூ ஜீன்''

31. முதல் மைக்ரோபுராசஸரை உருவாக்கியவர் - டெட் ஹோப்.

32. ஹொட் மெயிலை (Hot Mail) உருவாக்கிய இந்திய விஞ்ஞானி - ஸபீர் பாட்டியா

33. கணினி (Computer) என்ற பதம் உருவாக்கப் பெற்றுள்ள மூலக் கருத்து - கணக்கிடுதல்

34. Video editing, Animation, Modeling போன்ற துறைகளில் பயன்படுத்தப் படுவதற்குப் பொருத்தமான கணினி - Work station

35. Temperature, Voltage, Pressure போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தும் கணினி - Analog Computers

36. வெப்ப தொழிநுட்பத்தைப் (Heat Technique) பயன்படுத்தி அச்சடிக்கும் Printer வகை - Thermal - Electrostatic Printer

37. கணினியின் வேகத்தை அளக்கப் பயன்படும் அலகு - MHz

38. தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடர்பாடல் முறை - ஒற்றைவழி (simplex)

39. (plug and play) வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள கணினி துணைச்சாதனம் - USB

40. Microsoft நிறுவனம் இறுதியாக அறிமுகப்படுத்தி இயங்கிவரும் - Operating System - Windows 10

41. பல programகள் உடன் நிகழ அனுமதிக்கும் CPU - Multitasking Operating System

42. கணினியின் தொடக்க முறைவழிமுறை என்பது (booting process) - வன்வட்டு (Hard Dick), இறுவட்டு (CD Rom), நெகிழ்வட்டு (floppy disk) போன்ற ஒரு துணைத் தேக்கச் சாதனத்திலிருந்து (secondary storage device) முதன்மை நினைவகத்திற்குப் பணிச்செயல் முறைமையை ஏற்றும் முறைவழியாகும்.

43. முறைவழிப்படுத்தி (Processor) யின் பண்புகள் - கடிகாரத் துடிப்பு வேகம் (Clock speed), சொல் அளவு (word size), தரவுப் பாதை (data path), அதிகூடிய நினைவு (Maximum memory)

44. Clip Art எனப்படுவது - MS.Word இனால் வழங்கப்படும். ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள படங்களின் தொகுதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் உறுதியும் உருக்காய் மாறும் உள்ளமும்



வ. முஹம்மது நபீல்

ஓடி விளையாடு பாப்பா!
நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!

அறுவாள் போன்ற அடர்ந்த மீசையுடனும் பயமுறுத்தும் இரு விழிகளுடனும் நம்மைப் பார்த்து புன்னகைக்கும் பாரதியாரின் பாடல் இது! யாரும் இந்தப் பாடலை மறந்திருக்க மாட்டோம்...

கல்வியும் அழகிய பண்பாடுகளும் நமக்கு எந்தளவு தூரம் முக்கியமோ அதேயளவு விளையாட்டும் முக்கியமானதாகும்...! 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்' என எமது கிராமத்து பாட்டிமார் முணுமுணுப்பது போல எமது உடல் சீராக இருந்தால்தான் வாழ்வும் சிறப்பாக அமையும்.

ஒரு சில மாணவர்கள் கல்வியில் அதீத ஆர்வம் காட்டி விளையாட்டைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் இருப்பது அவர்களின் உடலையும் செயல்களையும் பார்த்தாலே தெளிவாக விளங்குகின்றது.

- நோய்வாய்ப்பட்ட கோழி போன்று சோர்ந்து போய் இருக்கிறார்கள்.
- கற்ற விடயங்களை ஞாபகப்படுத்த முடியாமல் தடுமாறுகிறார்கள்.
- சிறிது தூரம் நடந்தாலே களைத்துப் போய் மூச்சு வாங்குகிறார்கள்.
- அடிக்கடி நோய் என்று பாடசாலைக்கு வராமல் கஷ்டப்படுகிறார்கள்.
- முடிவு எடுக்க முடியாமல் திணறுகிறார்கள்.
- தைரியம் இல்லாமல் தாழ்வுச் சிக்கலுக்குள் அகப்பட்டு தங்களை தாங்களே தாழ்த்திக் கொள்கிறார்கள்.

இவையெல்லாம் நாம் அன்றாடம் வகுப்பில் காணும் காட்சிகள்தான்.

ஒவ்வொரு மாணவனும் இந்த தேசத்தின் தலைவன். வரலாற்றில் எமது தாய்நாட்டுக்கு அச்சுறுத்தல்களும் ஆபத்துக்களும் வந்த போதெல்லாம் நாம் முன்வரிசையில் நின்று போராடி எமது தாய்நாட்டைக் காப்பாற்றியுள்ளோம். அதேபோன்று, எதிர்காலத்திலும் நாம் இந்த நாட்டின் காவலர்களாக வலம் வர வேண்டும் என்றால் எமக்கு உடல் நலம் அத்தியாவசியம்; அவசர அவசியம். அதற்கு விளையாட்டுக்கள் அவசியம்.

இன்று தொலைபேசிகளிலும் கணினிகளிலும் எமது ஒட்டுமொத்த ஓய்வு நேரமும் சுருங்கி விட்டிருக்கின்றது. ஒரு காலத்தில் ஓடி, பாய்ந்து, ஏறி, குதித்து, விழுந்து, எழுந்து, அடிபட்டு, காயப்பட்டு விளையாடிய காலம் போய், இப்போது எமது விளையாட்டுக்கள் விழிகளுக்குள்ளும் விரல்களுக்குள்ளும் மாத்திரம் சுருங்கி விட்டிருக்கின்றன. தொடர் மாடிகளில் வசிக்கும் மாணவர்களின் நிலை சொல்ல முடியாத அளவு பரிதாபம்!!

அவர்களின் வாழ்வு வெற்றுச் சுவர்களுக்குள் முடக்கப்பட்டிருக்கிறது. படிகளில் ஏறுகின்றார்கள்; வாகனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கிறார்கள்; மெத்தைகளில் புரள்கிறார்கள். மற்றபடி விளையாட்டு எவ்வாறு போனாலும் அவர்களுக்கு உடல் களைக்குமளவு ஓடி, விளையாடி உடலுக்குத் தேவையான அடிப்படை உடற்பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளக் கூட அவகாசம் கிடைப்பதில்லை.

அன்புக்குரிய மாணவர்களே!

வாய்ப்புக்கள் தேடி வந்து எமது கதவுகளைத் தட்டப் போவதில்லை. நாம்தான் நமக்கான பாதைகளை செதுக்க வேண்டும். மைதான விளையாட்டுக்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். பாடசாலை விளையாட்டுக் கழகங்களில் இணைந்து உடல் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உணவுகளில் இரசாயன கலவைகள் மேலோங்கி வரும் இக்காலத்தில் காற்றில் கதிர்கள் கலந்து புற்றுநோய்க்கான வாய்ப்புக்கள் பெருகி வரும் இக்காலத்தில் விளையாட்டுக்கள் நிச்சயம் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்.

- இரத்த ஓட்டம் சீராக நடந்து மூளை சிறப்பாக செயற்படுவதால் உங்களால் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்க முடியும்.
- எந்தவொரு சிக்கலையும் இலகுவாகத் தீர்க்க உங்கள் மூளை உங்களுக்கு உதவும். மற்றவர்களை விட வேகமாக முடிவுகளை எடுக்கவும் அவற்றை செயற்படுத்தவும் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.
- நினைவாற்றல் வளரும்; கற்றல் கைகூடும்.
- உடல் ஒரு சீரான அமைப்பாக மாறும். நேர்த்தியாகவும் கம்பீரமாகவும் நீங்கள் உலா வருவீர்கள்.
- இதயமும் மூளையும் சதாவும் தூண்டிடப்பட்டுக் கொண்டே இருக்கும் (Regular release of key hormones of serotonin Dopamine and norepinephrine). இதனால் எப்போதும் நீங்கள் புத்துணர்ச்சியுடன் உலா வருவீர்கள். உங்கள் அருகில் இருப்பதை எல்லோரும் விரும்புவார்கள். உங்களை தம் குழுவில் இணைத்துக் கொள்ள எல்லோரும் போட்டி போடுவார்கள்.



- தலைமைத்துவ பண்பு வளரும். வகுப்பிலும் குடும்பத்திலும் சமூகத்திலும் நீங்கள் ஓர் அசத்தலான தலைவராக வலம் வர முடியும்.
- உணவு சமிபாடடைதல், கழிவு அகற்றல் உட்பட அனைத்து உடலியல் இயக்கங்களும் சீராக தொழிற்படும். வீணான நோய்களாலும் இயலாமையாலும் அஜீரண கோளாறுகளாலும் நீங்கள் அவதிப்படத் தேவையில்லை.
- உடல் அற்புதமாக வலிமை பெறும். உறுதியான தசைகள் வலுப்பெற்று உடல் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து தொழிற்பட ஆரம்பிக்கும். நன்றாக பசி எடுப்பதால், நன்றாக உணவு உட்கொள்ளலாம். அதிகளவு ஒட்சிசன் உள்ளீர்க்கப்படுவதால் நுரையீரல் சீராக தொழிற்படும்.

நாம் வரலாற்றை படித்துக் கொண்டிருக்க மாத்திரம் வந்தவர்களல்ல, புதிய வரலாற்றைப் படைக்க பிறந்தவர்கள். அதற்கு உடல் ஆரோக்கியம் அவசியம்தானே?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு

## இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானம்




இங்கிலாந்தில், லண்டனில் அமையப் பெற்றுள்ள பிரபல கிரிக்கெட் மைதானமான லோர்ட்ஸ், முழுவதுமாக மரபுசார் மின்சாரத்திற்கு மாற்றம் பெற உள்ளது. இது 1975 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் முதலில் நடைபெற்ற மைதானம் என்ற பெருமைக்குரியது. பருவ நிலை மாற்றம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் முயற்சியாக லோர்ட்ஸ் கிரிக்கெட் சங்கம் புதிய முயற்சி ஒன்றைக் கையில் எடுத்துள்ளது.

அதன்படி, இனி மைதானம் முழுவதும் மரபுசார் எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் மட்டுமே உபயோகப்படுத்தப்பட இருக்கிறது. மைதானம் முழுவதுமாக சோலார் தகடுகள், சிறிய ரக காற்றாலை ஆகியவை பொருத்தப்பட்டு, அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்து பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த திட்டம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதோடு மட்டுமில்லாமல், மின்சார செலவையும் கணிசமாகக் குறைக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இத்திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் இங்கிலாந்தில் உள்ள அனைத்து மைதானங்களும் படிப்படியாக மரபுசார் எரிசக்திக்கு மாற்றப்படும் எனவும் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## ஒலிம்பிக் பதக்கங்களாகும் பழைய ஸ்மார்ட்போன்கள்!

2020 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் வழங்க இருக்கும் பதக்கங்கள் பழைய ஸ்மார்ட்போன் மூலம் தயாரிக்கப்பட இருக்கிறது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 2020 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் வழங்கப்பட இருக்கும் பதக்கங்களை பழைய தொழிநுட்ப சாதனங்களை மறுசுழற்சி செய்து பயன்படுத்த இருப்பதாக அந்த நாடு தெரிவித்துள்ளது.

முன்னதாக பழைய ஸ்மார்ட்போன் மற்றும் சிறிய சாதனங்களை மறுசுழற்சி செய்து பதக்கங்களை தயாரிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாயின. அதன்படி, சுமார் 5000 பதக்கங்கள் இம்முறையில் தயாரிக்கப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பதக்கங்களை தயாரிக்கத் தேவையான உலோகங்களை சேகரிக்க ஜப்பான் முழுக்க பழைய சாதனங்களைச் சேகரிக்கும் பெட்டிகள் வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் நடைபெற்ற 2012 ஒலிம்பிக் போட்டிகளில் 9.6 கிலோ தங்கம், 1210 கிலோ வெள்ளி மற்றும் 700 கிலோ வெண்கலம் பதக்கங்களைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு ஜப்பான் 143 கிலோ தங்கம், 1566 கிலோ வெள்ளி மற்றும் 1112 தொன் செம்பு உள்ளிட்டவற்றை மின்சாதனங்களில் இருந்து ஜப்பான் அகற்றியது. இதில் ஒரு பங்கு 2020 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் போட்டிகளில் பதக்கங்களுக்காக பயன்படுத்த முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தினசரி பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த திட்டம் அமையும். பூமியில் கிடைக்கும் வளங்களுக்கும் ஓர் எல்லையுண்டு. இதனால் பொருட்களை மறுசுழற்சி செய்வது சுற்றுச் சூழலுக்கு நன்மை செய்வதாக அமையும் என ஜப்பானின் விளையாட்டுத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுத் தகவல்கள்

- ❖ 2016 ஆம் ஆண்டிற்கான 'ஸ்நூக்கர் சாம்பியன் ஷிப்' பட்டம் வென்றவர்?
  ஆதித்யா மேத்தா
- ❖ 'சைட்டியஸ், ஆல்டியஸ், போர்டியஸ்' எனப்படுபவை?
  ஒலிம்பிக்கின் வாசகம்
- ❖ 2019 ஆம் ஆண்டில் உலகக் கோப்பை கிரிக் கெட் நடைபெற உள்ள நாடு?
  இங்கிலாந்து
- ❖ மக்காவ் ஓபன் பெட்மிண்டன் போட்டியில் முதலிடம் வென்றவர்?
  பி.வி. சிந்து
- ❖ 53 ஆவது தேசிய பிரிமீயர் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் ?
  கார்த்திகேயன் முரளி
- ❖ 79 ஆண்டுகளுக்கு பிறகு '2015-டேவிஸ் கோப்பையை' கைப்பற்றிய அணி?
  இங்கிலாந்து
- ❖ உலக கால்பந்து கூட்டமைப்பு (SISA) எந்த நாட்டின் கால்பந்து அமைப்பை இடைநீக்கம் செய்துள்ளது? குவைத்
- ❖ 138 வருட கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறை யாக பகலிரவு டெஸ்ட் போட்டி நடைபெறும் இடம்? அடிலெய்டு-அவுஸ்திரேலியா
- ❖ கிரிக்கெட் விளையாட்டில் இரண்டு முறை 20/20 உலக கோப்பையை வென்ற முதல் அணி?
  மேற்கு இந்திய தீவுகள்
- ❖ அமெரிக்கன் கோப்பை எந்த விளையாட்டோடு தொடர்புடையது? படகுப் போட்டி
- ❖ கராத்தே என்பதன் பொருள்?
  வெறும் கைகள்
- ❖ அமெரிக்காவின் தேசிய விளையாட்டு
  கை எறி பந்து (BASE BALL)
- ❖ கிரிக்கெட் போட்டியில் ஒருநாள் சர்வதேச போட்டி முதன் முதலில் எப்போது அறிமுகப் படுத்தப்பட்டது? 1971
- ❖ கால்பந்து விளையாட்டுப் போட்டியில் உலக கோப்பையை அதிக முறை வென்ற நாடு?
  பிரேசில்
- ❖ 'புல்ஸ் ஐ' என்ற வார்த்தை எந்தப் போட்டியில் பயன்படுத்தப்படுகிறது? துப்பாக்கி சுடுதல்
- ❖ பங்கர், சுக்கர், மேலட் என்ற வார்த்தைகள் எந்த விளையாட்டுடன் தொடர்பு உடையவை?
  போலோ
- ❖ கிரிக்கெட் ஸ்டம்புகளின் உயரம் தரை மட்டத் திலிருந்து எவ்வளவு இருக்க வேண்டும்?
  28 அங்குலம்

# நாடுகளின் தேசிய விளையாட்டுக்கள்

| நாடுகள் | தேசிய விளையாட்டுக்கள் |
|---|---|
| இலங்கை | கரப்பந்தாட்டம் |
| இந்தியா | ஹொக்கி |
| அவுஸ்திரேலியா | கிரிக்கெட் |
| அமெரிக்கா | Base ball |
| ஜப்பான் | ஜுஜுட்சு |
| துருக்கி | மல்யுத்தம் |
| கனடா | பனி ஹொக்கி |
| ஸ்கொட்லாந்து | கால்பந்து, ரக்பி |
| பாகிஸ்தான் | கிரிக்கெட் |
| ஸ்பெயின் | காளைச் சண்டை |
| இங்கிலாந்து | கிரிக்கெட், ரக்பி, கால்பந்து |

✍ ஸாரா பாத்திமா
அல் ஹிக்மா கல்லூரி
கொழும்பு - 12

# வரலாற்றில் ஒரு நாள்

இலங்கைக்கு கிரிக்கெட் டெஸ்ட் அந்தஸ்து கிடைத்ததும் 1982 பெப்ரவரி 17 ஆம் திகதி பி. சரவணமுத்து விளையாட்டரங்கில் முதலாவது விளையாட்டியினை இங்கிலாந்து அணிக்கு எதிராக விளையாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கலைந்த கனவுகள்

தாயே! உன்னை விட்டுப் பிரிந்து
வாழும் நாட்கள்...
உன்னுடன் வாழ்ந்த நாட்களை
நினைவுபடுத்துகின்றன
உன் பாசத்திற்காக ஏங்கித் தவிக்கிறது
என் மனம் இவ்விடுதியில்...

உன் கைகளால் உண்டு பழகிய என் நாவு
இப்போது உன் கைகளால் ஒரு பிடி உணவு
உண்ண ஏங்கித் தவிக்கிறது

உன் மடியில் தலைசாய்த்து
உறங்கிய என் தலை
இப்போது பஞ்சுத் தலையணையில் கூட
உறங்க மறுக்கிறது...

உன் முகத்தைப் பார்த்து புன்னகைத்த
என் உதடுகள் உன்னைக் காணாமல்
புன்னகைப்பது எவ்வாறென்பதையே
மறந்து தவிக்கிறது

எனக்கு அடிமையாகி இருந்த
என் உறுப்புக்கள் இப்போது
என் தாய்க்கு அடிமையாகி விட்டன

நான் காத்திருந்த அந்த நாள் வந்தது
அதுதான் நான் உன்னைக் காணும் நாள்

என் நண்பர்களின்
பெற்றோர் வந்திருந்தனர்

தாயே! உன்னை மட்டும் காணவில்லை
என் கண்கள்...
மாறாக என் மாமாவே வந்திருந்தார்
என்னை அழைத்துச் செல்வதற்காக
நான் சந்தோஷமாகப் புறப்பட்டேன்
என் தாயைக் காண...

என்னைக் கண்டவுடன் கட்டி அணைத்துக்
கொள்ளும் கரங்களோ
அங்கு கட்டிப் போடப்பட்டிருந்தன
ஆம், நான் அணைத்துக் கொண்டது
என் தாயை அல்ல; தாயின்
இறந்த உடலை...

✍ ஜின்னா ஹில்மி
தரம் - 10
கெகுணகொல்ல தே.பா, குருணாகல்

## சூரியோதயம்

காலையில் சூரியன் உதித்திடுவான்
காணும் இருளை விலக்கிடுவான்
கதிர்கள் பரப்பி எழுந்திடுவான்
கவின் மிகு காட்சி தந்திடுவான்

கோவில் மணிகள் ஒலி எழுப்பக்
'கொக்கரக்கோ' சேவல் கூவிவர
பறவைக் கூட்டம் வாழ்த்திசைக்கப்
பகலவன் உதயம் செய்திடுவான்

உலகம் சிறக்க உதவிடுவான்
உயிர்கள் வாழ உதவிடுவான்
வான மங்கை மனம் மகிழ
வண்ண ஒளியைத் தந்திடுவான்

மழையும் வெயிலும் அவனாலே
மலர்கள் மலர்வதும் அவனாலே
மக்கள் வாழ்வதும் அவனாலே
மகிழ்ந்து நாமும் பாடிடுவோம்

✍ ஆர்.ஏ. வெரோனிக்கா
கற்பிட்டி
அல் அக்ஸா தே.பா.



## பேசும் கவிதை - இல 23



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 பெப்ரவரி 25**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்



### முதலிடம் பெற்ற கவிதை

## கூட்டுறவு

மூவின மக்களும்
இணைவோம் வாரீர்
ஒற்றுமை கீதம்
இசைப்போம் வாரீர்
ஓங்கிடும் கூட்டுறவை
வளர்ப்போம் வாரீர்

**ஆர். எம். அஸ்ரித் முஹம்மத்**
**பொ/அல் அஸ்ஹர் ம.வி**

## ஓர் அணியாய் வாழ்ந்திடுவோம்!

ஓடும் உதிரம் ஒன்றே
எண்ணம் கொள்ளல் நன்றே
வாழும் நாடும் ஒன்றே
திண்ணம் கொள்ளல் நன்றே
மூவினச் சிட்டுக்களின் முகமதினிலே
தோன்றிடும் புன்னகை
தொடர பிரார்த்திக்கிறோம்!

**எம். எம். பஸ்லி**
**நிக/அபுக்காகம மு.ம.வி.**
**தரம்- 09**

## ஒற்றுமையின் சின்னமாய் இலங்கை

ஒற்றுமை ஓங்கிடட்டும் எம்
இலங்கை நாட்டிலே
வேற்றுமை கலைந்திடட்டும் வேகமாய்
நாட்டிலே
சமாதானம் பரவிடட்டும்
சுதந்திர நம் நாட்டிலே
இன, மத, பேத மொழிந்து
சமாதானம் பூக்கட்டும்
இத்திரு நாட்டிலே..!

**எம். எச். ஹஸ்பா**
**தரம்- 06**
**நிக/கல்பானுவ மு.வி.**

## உறுதி பூணுவோம்

இன, மத பேதமின்றி
நாமனைவரும் ஒன்றிணைந்து
எம் இன்னோர் அன்னையாம்
இலங்கை தேசத்தின் 69 ஆவது
சுதந்திர தினத்திலே
இம்மண்ணைக் காத்து
கட்டியெழுப்புவோம்!

**எம்.ஏ.எப். சமீஹா**
**வெலம்பொட**

## விடுதலை

உதிரங்கள் சிந்தி
உயிர்களை
உரமாக சிந்தி
பெற்றெடுத்தோம்
எமது தேசத்திற்கான
விடுதலை வெற்றியை

**பாத்திமா ஸிபா**
**அல்ஹு'தா மு.ம.வி.**
**ரிதீகம**

## மௌனம் கலைத்திடு தோழா

மௌனம்
கலைத்திடு தோழா
வாழ்வை
வென்றிடு தோழா
வரலாற்றை
மாற்றிடு தோழா
உண்மை
உரைத்திடு தோழா
உயர்வை
விரும்பிடு தோழா

**எம்.ஐ.எம். ஹரிஸ்**
**தெல்தோட்ட**

## துப்பாக்கி ரவைகள்

தூவும் துப்பாக்கி
ரவைகள் வேண்டாம்
அன்பு போதும்
நேசம் போதும்
உண்மை போதும்
உயர்வு போதும்

**எம்.ஐ.எம். அஷ்பாக்**
**வெலிவிட்ட**

## ஒற்றுமை ஓங்கிடட்டும்

ஒற்றுமை ஓங்கிடட்டும்
வேற்றுமை கலைந்திடட்டும்
இன பேதங்களை துறந்து
இந்த தேச சிற்பிகளாகவும்
சகவாழ்வு சின்னங்களாகவும்
வாழ்ந்திடுவோம்!

**ரயீஸா இல்யாஸ்**
**நிக/கல்பனாவ மு.வி**

## சுதந்திர வேட்கை

ஏற்ற தாழ்வின்றி
சாதி, மத பேதமின்றி
அன்னை தந்தையின்
அன்பையும்
ஆசானுடைய அறிவையும்
இரு சிறகுகளாக கொண்டு
சந்தோஷ வானில் நாமே..!

**எம்.ஜே. எப் நிஷாதா**
**இஸ்லாஹிய்யா வளாகம்**

## நாடு வளர்ந்திட

சிங்கக்கொடியின் சந்ததியாய்
சான்றோரின் சரித்திரமாய்
நாடு வளர்ந்திட
என்றென்றும் உம் புன்னகையும்
ஒற்றுமையும் மகிழ்ச்சியும்
இருந்திடட்டும்!

**லரீப் முஹம்மத் மிப்தாஸ்**
**நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி**

## எல்லோரும் இணைந்து

ஒற்றுமையாய் இருந்து
பெற்ற வெற்றி
எனது சுதந்திரம்

**நுஹா**
**அல்ஹிக்மா கல்லூரி**
**கொழும்பு - 12**

## சோர்வு வேண்டாம்

நமது தேசத்தை நாம் காப்போம்
சோர்வு வேண்டாம்
நமது தாய்பூமியை
நாம் வளப்படுத்துவோம்
அர்த்தமற்ற அரட்டைகள்
வேண்டாம்

**ஸெயின் மர்ஸூக்**
**மாகோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08 ஆம் பக்கத் தொடர்...**

எனவே, மண்ணின் கீழ், மண்ணின் மேல், மரக் கிளைகளில் என வேறுபட்டு வாழும் இயல்பைப் பெற்றிருக்கின்றன. இவற்றில், ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து, அதற்கு தகுந்தபடி தமது இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றன. அவற்றின் நில வசிப்பிடத்தினைப் 'புற்று' என்பர். சாதாரணமாக ஓர் அடி முதல் 20 அடி உயரம் வரை 30 மீற்றர் விட்டம் வரை இவை புற்றுகளைக் கட்டும். அத்திவாரம் உறுதியாக இருந்தால்தான் கட்டுமானம் உறுதியாக இருக்கும். எனவே, புற்றின் உயரம் போலவே இரு மடங்கு அதன் கீழ்த்தளமும் இருக்கும். ஒரு புற்றில் இரண்டு பகுதிகள் இருக்கும். ஒன்று, பூமிக்குக் கீழே உள்ள அடுக்கு. இரண்டாவது, பூமிக்கு மேலே உள்ள அடுக்கு. பூமிக்குக் கீழே குழி தோண்டி அந்த மண்ணைக் கொண்டு பூமிக்கு மேலே சுவரெழுப்புகின்றன. கறையானின் அளவுக்கு அது கட்டும் புற்றின் அளவை ஒரு மனிதனுக்கு ஒப்பிட்டால் அதாவது, ஒரு கறையான் மனிதனின் உயரம் இருக்குமென்றால் அது கட்டும் புற்றின் அளவு துபாயில் உள்ள புர்ஜ் கலீபாவை விட உயரமாக இருக்குமாம், சுபஹானல்லாஹ்!

நில மட்டத்திலிருந்து ஆழம் செல்லச் செல்ல ஒக்ஸிஜனின் அளவு குறையும். கறையான்களின் எண்ணிக்கையும் பல ஆயிரக் கணக்கில் இருப்பதால் இன்னும் ஒக்ஸிஜனின் அளவு குறைந்து கார்பன் அதிகரித்து உஷ்ணமும் கூடி பெரும் சிக்கலை ஏற்படுத்தும். அதற்காக ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் இப்புற்றுக்களில் சுவாசம் நடைபெறுகின்றது. பகற் பொழுதில் ஒரு தடவை வெளியிலிருந்து காற்று புற்றின் அடி ஆழம் வரை உள் இழுக்கப்படுகின்றது. இரவில் மீண்டும் அக்காற்று வெளியே தள்ளப்படுகின்றது. எனவே, புற்றினுள் எப்போதும் குளிராக இருக்கும். அப்படியான காற்றோட்ட (Ventilation System) அமைப்பும் உண்டு.

**சுருக்கமாக...**

கறையான்களின் வாழ்க்கை முறை, கூட்டமைப்புடன் செயற்படும் தன்மை, கட்டுப்பாடு, துடிதுடிப்பான செயற்பாடு, தமது சமூகத்தைப் பாதுகாக்க சண்டையிடுதல், உயிர்த் தியாகம் செய்தல், இனப்பெருக்கம், பார்வை இல்லாவிடினும் அற்புதமாக புற்றுகளை நிர்மாணிக்கும் ஆற்றல், எளிதில் பொருள்கள் உக்கிப் போக உதவுதல் என பல்வேறு சிறப்பியல்புகளுடன் கறையான்கள் எம்மைச் சூற்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மனித அறிவே பிரமிக்கும் தொழிநுட்பங்களைக் கொண்டு தமது வாழ்க்கையை ஓட்டும் இவை அல்லாஹ்வின் மாபெரும் அத்தாட்சிதான், அல்ஹம்துலில்லாஹ்!

# என் முதல் ஆசான்



நான் தொட்டிலிலே அன்று
என் நிலை மறந்து தூங்க
என் அசைவை எதிர்பார்த்து
நீர் என் அருகே
உறங்காமல் காத்திருந்தீர்!

என் அழுகுரல் கேட்டு
ஓடி வந்து வாரி அணைத்து
முத்தமிட்டு கொஞ்சிக் குலாவிய
அத்தருணங்கள்...

நான் தூங்கையிலே...
என்னை தூங்க வைத்திட
நீர் பாடிய பாடல்களும்
குர்ஆனிய ஓதல்களும்
என்னுள்ளே நிழலாட
தங்களின் ஓரத்தில்
கண்ணீருடன் எதிர்பார்க்கின்றேன்
மீண்டும் உம் அன்பை...

நான் மகிழ வேண்டும் என்பதற்காய் அன்று
கூச்சமின்றி மேடை ஏறி
என்னைப் பற்றிய பாடல் ஒன்றை நீர் படிக்க
அறிந்தேன் அன்று - நீர்
என் மேல் கொண்ட அன்பை...

எத்தனை கஷ்டங்கள் வந்தாலும்
எவ்வளவு துன்பங்கள், அவமானங்கள்
அசிங்கங்கள் வந்த போதிலும்
எதுவுமே தெரியாதது போல்
கட்டிக் கொள்ளும்
என் தந்தையின் அன்பை
எதிர்பார்த்தவளாய்...

✍ தஹ்மீனா பாஜு உஸ்ஸ்
இஸ்லாஹிய்யா, புத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியவாதியும் அக்பர் பாதுஷாவும்

ஸீயெம்மே அமீன்

பனாரஸிதாஸ், அக்பர் பாதுஷாவின் நவரத்தினங்களுள் ஒருவர். அவர் தனது சத்திய வாழ்க்கை காரணமாகப் பெரும் புகழ் பெற்றிருந்தார். ஒரு நாள் அக்பர் அவரைச் சோதிக்க எண்ணினார். ''இன்று அவரை எப்படியாவது பொய் பேச வைக்க நிர்ப்பந்திக்க வேண்டும்'' என்பதே அவரது நோக்கமாக இருந்தது. அதற்காக ஒரு பறவையைப் பிடித்து அதனைத் துணியால் மறைத்தவாறு தர்பாருக்கு எடுத்து வந்தார்.

அக்பர் பனாரஸிதாஸைப் பார்த்து, ''இந்தப் பறவை உயிரோடு இருக்கின்றதா, செத்துவிட்டதா?'' என்று கேட்டார். பனாரஸிதாஸ் அக்பரின் தந்திரத்தைப் புரிந்து கொண்டார்.

''ஜஹாம்பனாஹ்! அந்தப் பட்சி இறந்து விட்டது. ஆனால், நீங்கள் விரும்பினால் அதனை உயிர்ப்பிக்க முடியும்'' என்றார் அவர்.

பனாரஸிதாஸின் பதிலைக் கேட்டு அக்பர் அதிர்ச்சியடைந்து விட்டார். ''நீங்கள் உண்மையும் சொன்னீர்கள்; பொய்யும் சொன்னீர்கள். ஏன் அப்படிச் செய்தீர்கள்?'' என்று அவரிடம் கேட்டார் பாதுஷா.

அதற்கு பனாரஸிதாஸ் சொன்னார்: ''ஜஹாம்பனாஹ்! பறவை உயிரோடு இருக்கிறது என்று நான் சொன்னால், நீங்கள் அதனுடைய கழுத்தைத் திருகி விடுவீர்கள். இறந்து விட்டது என்று சொன்னால் நீங்கள் அது உயிரோடு இருப்பதை எடுத்துக் காண்பிப்பீர்கள். பட்சி உயிரோடுதான் இருக்கிறது என்று நான் உண்மை சொன்னால் ஓர் அப்பாவி உயிர் கொல்லப்பட்டு விடும். இரங்கத்தக்க ஒரு பட்சியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக எனக்குப் பொய் பேச வேண்டி ஏற்பட்டது.''

இதனைக் கேட்ட பாதுஷா ''உண்மையிலேயே நீங்கள் சத்தியவாதிதான். சோதனையில் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள். நீங்கள் சொன்னது போன்று பட்சி உயிரோடுதான் இருக்கிறது. இதோ, அதற்கு விடுதலை அளிக்கிறேன்'' என்று கூறியவராக பறவையைப் பறக்க விட்டார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்




**நேரம் 45 நிமிடம்**
**வினாப்பத்திரம் I**




ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பொருத்தமற்ற உருவை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.**

1\.




2\.




3\. 30030 என்பதை சொற்களில் எழுதினால்
i. மூதுவாயிரத்து முந்நூறு
ii. மூவாயிரத்து முப்பது
iii. முப்பதாயிரத்து முந்நூறு
iv. முப்பதாயிரத்து முப்பது

4\. 114, 117, 120, ..... என்ற எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களாவன?
i. 122, 125   ii. 121, 124
iii. 123, 126   iv. 122, 130

5\. இங்கு உருவில் நிழற்றப்படாத பகுதி பின்னத்தில்?



i. 1/4   ii. 2/4
iii. 3/4   iv. 1/8

6\. 26781 என்னும் எண்ணை விரித்து எழுதினால்?
i. 2000+600+700+80+1
ii. 20000+6000+70+80+1
iii. 20000+6000+700+80+1
iv. 20000+6000+7000+800+01

7\. முக்கோணத்தின் சுற்றளவைக் காண்க.




i. 22.6 cm
ii. 22.5 cm
iii. 22.4 cm

8\. 2 ஆல், 5 ஆல், 10 ஆல் மீதியின்றி வகுபடும் எண்தொகுதியின் கீழ் கீறிடுக.
i. 100, 50, 75   ii. 30, 40, 50
iii. 50, 60, 65   iv. 10, 15, 20

9\. 3465 இன் இலக்கம் நான்கின் இடப் பெறுமானம் யாது?
i. நானூறுகள்   ii. நாற்பதுகள்
iii. நூறுகள்   iv. பத்துகள்

**7.5, 7.06, 7.09, 7.05 என்ற தசம எண்களில்**

10\. மிகப் பெரிய எண்?

11\. மிகச் சிறிய எண்?


12\. தரப்பட்டுள்ள மூன்று எண்தொகுதிகளுல் ஒன்று வித்தியாசமானது. அதன் கீழ் கீறிடுக.
i. 79+49+99   ii. 68+78+87
iii. 50.0-267

13\. 15 நிமிடங்களில் மாணவன் 20 பக்கங்கள் வாசிப்பான். ஒரு மணித்தியாலத்தில் எத்தனை பக்கங்கள் வாசிப்பான்?
i. 60 பக்கங்கள்   ii. 80 பக்கங்கள்
iii. 15 பக்கங்கள்   iiv. 20 பக்கங்கள்

14\. 10000 இல் இருந்து 9 ஐ கழித்தால் வரும் விடை
i. 9999   ii. 9099
iii. 9001   iv. 9991


**கோலத்திற்கு தரவுகளுக்கேற்ப இடைவெளிக்கு வர வேண்டிய எண்களை தெரிவு செய்க.**

15\.




i. 12   ii. 36   iii. 18   iv. 20

16\.




i. 4
ii. 3
iii. 6

17\. ஒரு குவியலில் உள்ள 100 மாம்பழங்களில் 4/5 பங்கு விற்கப்பட்டால் மிகுதியாக இருக்கும் மாம்பழங்கள் எத்தனை?
i. 40   ii. 30
iii. 10   iv. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஒரு குவியலில் 125 தேங்காய்கள் உள்ளன. இன்னுமொரு குவியலில் இதனை விட 25 தேங்காய்கள் அதிகம் உள்ளன. இரு குவியலிலும் உள்ள மொத்த தேங்காய்கள்?
i. 275 ii. 200
iii. 175 iv. 150

19. நேற்று முன்தினம் 12 ஆம் திகதி புதன்கிழமை எனின், நாளை மறுதினம் என்ன நாள், என்ன திகதி?
i. ஞாயிறு - 16 ஆம் திகதி
ii. வெள்ளி - 15 ஆம் திகதி
iii. ஞாயிறு - 15 ஆம் திகதி
iv. சனி - 16 ஆம் திகதி

20. 49 ஐ 5 ஆல் பெருக்கி வரும் விடையிலிருந்து 10 ஐ கழித்தால் வரும் விடை?
i. 235 ii. 245
iii. 250 iv. 345

21. 24 cm நீளத்தைக் கொண்ட கம்பியொன்றினால் அமைக்கப்பட்ட செவ்வக வடிவமொன்றின் அகலம் 4 cm ஆகும். அதன்படி அச்செவ்வக வடிவத்தின் நீளம்?
i. 6 cm ii. 8 cm
iii. 5 cm

22. வீதியொன்றில் ஒரேயளவான தூரங்களில் கொடிகள் நாட்டப்பட்டுள்ளன. ஒன்றுக்கொன்று அருகில் அமைந்துள்ள 5 கொடிகளுக்கிடையிலான தூரம் 8 மீற்றராகும். அதன்படி ஒன்றுக்கொன்று அருகில் அமைந்துள்ள 12 கொடிகளுக்கிடையிலான தூரம்?
i. 24 m ii. 22 m
ii. 16 m

23. மனோஜ் ஓர் ஆண்பிள்ளையாவான். அவனுடைய தங்கைக்கு இருக்கும் சகோதரிகளின் எண்ணிக்கை 3 ஆகும். அதன்படி மனோஜிற்கு இருக்கும் சகோதரிகளின் எண்ணிக்கை?
i. 3 ii. 5 iii. 4

24. இத்தராசு சமநிலையடைவதற்கு A, B பக்கங்களுக்கு இட வேண்டிய நிறைகளின் ஒழுங்கு முறை?





i. A யிற்கு 500g B யிற்கு 500g
ii. A யிற்கு 250g B யிற்கு 750g
iii. A யிற்கு 250g B யிற்கு 500g

25. வகுப்பறையில் கீழே விழுந்து கிடந்த ரூ 100.00 காசுத்தாளை வகுப்பாசிரியரிடம் ஒப்படைத்தான். இதன்படி ரோஹினி?
i. திறமையான மாணவி
ii. நேர்மையான மாணவி
iii. புத்திசாலி

26. BDF, SEG, DFH, ........
மேலேயுள்ள வரிசையில் ஆங்கில எழுத்துக்கள் ஏதோவொரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளது. அதன்படி வெற்றிடத்திற்குப் பொருத்தமானது?
i. FHJ ii. IKM
iii. EGI

27. இன்னும் 2 வருடங்களில் நீலாவின் வயது மாரியின் வயதைப்போல் நான்கு மடங்காகும். தற்போது நீலாவின் வயது 18 எனின், தற்போது மாரியின் வயது?
i. 5 வயது ii. 4 வயது
iii. 3 வயது

28. பெட்டியொன்றில் கறுப்பு நிற 8 பேனைகளும் கறுப்பு நிறமல்லாத 7 பேனைகளும் நீல நிறத்தில் 9 பேனைகளும் உள்ளன. அதன்படி பெட்டியில் உள்ள மொத்த பேனைகள்?
i. 24 i. 15
iii. 17

29.  = 18 எனின்  இவ்வுருவின் பெறுமதி?
i. 24 ii. 22
iii. 30

30. மழைக் காலங்களில் டெங்கு நோய் பரவிச் செல்வது அதிகரிக்கும். இதற்குரிய காரணம்?
i. அசுத்தமான நீரைப் பருகுதல்
ii. வைத்திய வசதிகள் குறைவாக இருத்தல்
iii. நீர் தேங்கும் இடங்களில் டெங்கு நுளம்புகள் முட்டையிடல்

44 ஆம் பக்கம் பார்க்க...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



**நேரம் 1 மணி 15 நிமிடம்**
**வினாப்பத்திரம் II**



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

1. பின்வரும் வித்துக்களில் சிவப்பு நிறமுடைய வித்து?
   i. பப்பாசி   ii. ஆமணக்கு
   iii. சோளம்   iv. மஞ்சாடி

2. வேர் தண்டுக் கிழங்கு மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்?
   i. மரவள்ளி   ii. கரும்பு
   iii. வல்லாரை   iv. மணிவாழை

3. அதிகளவு நீர் தேவைப்படாத ஒரு தாவரம்?
   i. நெல்   ii. கமுகு
   ii. நாகதாளி   iv. வாழை

4. ரொட்டி, கஞ்சி, பிட்டு என்பன தயாரிக்கப் பயன்படும் வித்து?
   i. குரக்கன்   ii. நிலக்கடலை
   iii. மரவள்ளி   iv. மரமுந்திரி

5. பின்வரும் இலைகளுள் ஒத்த வடிவங்களைக் கொண்ட இலைகள்?
   i. வெற்றிலை-அகத்தி
   ii. அகத்தி-ஈரப்பலா
   iii. வெற்றிலை-தப்பிலி
   iv. வெற்றிலை-வேம்பு

6. வானிலை அறிக்கை பற்றி தினமும் அறிய வேண்டியவர்கள் யார்?
   i. ஆசிரியர்கள்   ii. மாணவர்கள்
   iii. மீனவர்கள்   iv. வியாபாரிகள்

7. இலங்கையில் அழகுக்காக நாற்று சாடிகளில் வளர்க்கப்படும் பயிர்?
   i. மல்லிகை   ii. செவ்வரத்தை
   iii. அந்தூரியம்   iv. மிளகாய்

8. மிக விரைவாக முளைக்கும் வித்துக்கள்?
   i. பயறு, கௌபி   ii. மா, தென்னை
   iii. பனை, பாகல்   iv. புடோல், மா

9. அதிகளவு புராதனக் குளங்கள் காணப்படும் மாவட்டம்?
   i. வவுனியா   ii. அம்பாறை
   iii. கொழும்பு   iv. பொலநறுவ

10. கடிகாரப் பறவைகள் என அழைக்கப்படுபவை?
   i. காகம், கோழி   ii. சேவல், காகம்
   iii. புறா, கோழி   iv. புறா, கோழி

11. வேலையை இலகுவாக்க இடுக்கி எனும் உபகரணத்தை பயன்படுத்துவோர்?
   i. பொற்கொல்லன்   ii. மேசன்
   iii. தச்சன்   iv. கமக்காரன்

12. விக்டோரியா நீர்த்தேக்கம் அமைந்துள்ள மாகாணம்?
   i. மேல் மாகாணம்
   ii. ஊவா மாகாணம்
   iii. மத்திய மாகாணம்
   iv. வட மாகாணம்

13. சேனநாயக்க சமுத்திரம் அமைந்துள்ள மாகாணம்?
   i. வட மத்திய மாகாணம்
   ii. கிழக்கு மாகாணம்
   iii. மேல் மாகாணம்
   iv. வடமேல் மாகாணம்

14. ராஜாங்கணை வாவி அமைந்துள்ள மாகாணம்?
   i. வடமத்திய மாகாணம்
   ii. ஊவா மாகாணம்
   iii. மத்திய மாகாணம்
   iv. வடமேல் மாகாணம்

15. காந்தமொன்றினால் கவராத பொருள் எது?
   i. செம்புக்கம்பி   ii. இரும்பாணி
   iii. குண்டூசி   iv. உருக்குக் கத்தி

16. 

17. 

18. 

19. 

2017 - மார்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இலைக்கஞ்சி தயாரிக்கும்போது பயன்படுத்தும் இலை?

i. மரவள்ளி ii. முடக்கொத்தான்
iii. வெண்டி iv. மாதுளை

21. பழமர தோட்டத்திற்கு தீங்கு செய்யாத பிராணி?

i. உடும்பு ii. மயிர்கொட்டி
iii. கறையான் iv. பன்றி

22. இயற்கையின் தாக்கம் காரணமாக ஏற்படத்தக்க அனர்த்தங்களில் அமையாதது?

i. வெள்ளப் பெருக்கு ii. மண்சரிவுகள்
iii. புயல் iv. நீர்வீழ்ச்சி

23. யால பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம்?

i. வவுனியா ii. புத்தளம்
iii. மொனறாகலை iv. பதுளை

24. வெயில் காலங்களில் குளிர்ச்சியான நிழலை தரும் மரம்?

i. ஆலமரம் ii. மாமரம்
iii. தேக்குமரம் iv. மரமுந்திரி மரம்

25. மழை வருவதற்கு முன்னர் பிராணிகளால் காட்டும் துலங்கல்களில் ஒன்று?

i. நாய்கள் அங்குமிங்கும் திரியும்.
ii. எறும்புகள் கூட்டம் கூட்டமாக மேடு நோக்கிச் செல்லும்.
iii. பறவைகள் கூட்டம் கூட்டமாக பறக்கும்.
iv. பூனைகள் கத்தும்.

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

26. மழை வீழ்ச்சி அளக்கப்படுவது?

i. மில்லி லீற்றர்களினால்
ii. மீற்றர்களினால்
iii. மில்லி லீற்றர்களினால்
iv. கிராம்களினால்

27. இலங்கைக்கு மேற்குத் திசையில் அமைந்துள்ளது?

i. ஆபிரிக்க நாடுகள் ii. இந்தியா
iii. மலேசியா iv. இந்து சமுத்திரம்

28. தேளுக்கு உள்ள கால்களின் எண்ணிக்கை?

i. 06 ii. 08
iii. 10 iv. 12

29. முட்கள் அமைந்துள்ள தாவர இலை?

i. பாகல் ii. கொடிதோடை
iii. வட்டுக்கத்திரி iv. மரவள்ளி

30. விவசாயத்தில் மட்டப்பலகை பயன்படுத்தப்படுவது?

i. வயலில் உழுவதற்கு
ii. நெற்பயிர்களை அறுவடை செய்வதற்கு
iii. வயலில் சேற்றை மட்டப்படுத்துவதற்கு
iv. நெல் விதைப்பதற்கு

31. வெப்பமானியில் வெப்பநிலையினை அளவிடுவதற்கு முன் செய்ய வேண்டியது?

i. வெப்பமானியை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தல்.
ii. வெப்பமானியில் இரசம் கீழே செல்லும் வண்ணம் உதறுதல்.
iii. வெப்பமானியில் இரசம் மேலே செல்லும் வண்ணம் உதறுதல்.
iv. வெப்பமானியை கொதிநீரில் அமிழ்த்துதல்.

32. கிராம சேவகரினால் எமக்குக் கிடைக்கும் சேவை?

i. மரம் வெட்டுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
ii. தேசிய அடையாள அட்டைகளை வெளியிடுதல்.
iii. சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
iv. வதிவுச் சான்றிதழை வழங்குதல்.

33. அயடீன் அதிகளவில் அடங்கியுள்ள உணவு?

i. முட்டை ii. பால்
iii. கடல் மீன்கள் iii. ரொட்டி

34. நீர்மின் உற்பத்தி நிலையம் எது?

i. நுரைச்சோலை
ii. விக்டோரியா
iii. சபுகஸ்கந்த
iv. களனிதிஸ்ஸ

35. ருவன்வெலிசாயவை கட்டுவித்த அரசன்?

i. துட்டகைமுனு
ii. தாதுசேனன்
iii. மகாசேனன்
iv. வலகம்பாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

அணிலைக் கண்ட பூனையார்
அருகில் பாய்ந்து சென்றார்
அதனைக் கண்ட அம்மா
அகப்பையை வீசி அடித்தார்
அணிலும் தப்பித்தது
அம்மா சிரித்து மகிழ்ந்தார்

36. பாடலில் இடம்பெற்ற உயர்திணை பெண்பால்?
i. அணில் ii. பூனை
iii. அம்மா

37. பாடலில் இடம்பெற்ற ஒன்றன் பால்?
i. பூனை ii. அடித்தார்
iii. அம்மா

38. வினையெச்சம் ஒன்று?
i. வீசி ii. கண்ட iii. அகப்பை

39. பெயரெச்சம் ஒன்று?
i. சிரித்து ii. கண்ட iii. அருகில்

40. அம்மாவிற்கான எதிர்பாற்கருத்து?
i. மாதா ii. அன்னை
iii. அப்பா

41. ஒழுங்கின்றிக் காணப்படும் வாக்கியங்களை ஒழுங்கமைத்து கட்டத்தினுள் இலக்கங்களை எழுதுக.

அம்மா அப்பாவை சமாதானப்படுத்தினாள். ☐
கமலன் பந்தை வேகமாக உதைத்தான். ☐
அப்பா அமைதியானார். ☐
பந்து கண்ணாடியில் பட்டு சுக்குநூறாக உடைந்தது. ☐
அப்பா கோபத்துடன் கமலனை துரத்தினார். ☐

பின்வரும் வாக்கியத்தில் எழுவாய் அடைமொழிக்குக் கோடிடுக.

42. சிவந்த பழத்தை பச்சைக்கிளி கொத்தியது.

43. கறுத்த மாடு பெரிய வயலை உழுதது.

44. பின்வரும் படர்க்கை வாக்கியத்திற்கு கோடிடுக.
i. வரிப்புலி பாய்ந்து சென்றது.
ii. நாங்கள் பலகாரம் சாப்பிட்டோம்.
iii. நீங்கள் அழுது புலம்ப வேண்டாம்.

விடைகள்

| | |
|---|---|
| 1. iv | 27. i |
| 2. i | 28. ii |
| 3. iii | 29. iii |
| 4. i | 30. iii |
| 5. iii | 31. ii |
| 6. iii | 32. iv |
| 7. iii | 33. iii |
| 8. i | 34. ii |
| 9. iv | 35. i |
| 10. ii | 36. iii |
| 11. i | 37. i |
| 12. iii | 38. i |
| 13. ii | 39. ii |
| 14. iv | 40. iii |
| 15. i | 41. 4, 1, 5, 2, 3 |
| 16. கலப்பை | 42. பச்சை |
| 17. அந்தாங்கு | 43. கறுத்த |
| 18. மூலைமட்டம் | 44. i |
| 19. தட்டுப்பொல்லு | |
| 20. ii | |
| 21. i | |
| 22. iv | |
| 23. iii | |
| 24. i | |
| 25. ii | |
| 26. ii | |

41ஆம் பக்கத் தொடர்...

விடைகள்

| | | |
|---|---|---|
| 1. iii | 11. 7.05 | 21. ii |
| 2. iii | 12. iii | 22. ii |
| 3. iv | 13. ii | 23. iii |
| 4. iii | 14. iv | 24. iii |
| 5. iii | 15. ii | 25. ii |
| 6. iv | 16. ii | 26. ii |
| 7. i | 17. iii | 27. i |
| 8. ii | 18. | 28. i |
| 9. i | 19. i | 29. i |
| 10. 7.5 | 20. i | 30. iii |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எண்ணங்களின் வண்ணங்கள் - 19

பரிசில்களை பெறும் சித்திரங்கள்

## தலைப்பு: இல்ல விளையாட்டுப் போட்டி



எம்.எஸ்.எப். சுஹைறனா
அ/கல்லஞ்சியாகம அ.மு.வி.
காகம



பாத்திமா நுஹா
கு/பறகஹதெனிய தே.பா.
குருநாகல்



அஸ்ரா அலிகான்
கு/பரகஹதெனிய தே.பா.
குருநாகல்

பாராட்டுக்குரிய சித்திரங்கள்



ஐ. முஸ்னி அஹமட்
நிக/கல்பானவ ம.வி.
அபுக்காகம




எஸ்.எப். சல்மியா
மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்




ஏ.எப். சம்ஹா
மன்/மகளிர் ம.வி.
எருக்கலம்பிட்டி





இம்ரா லரீப்
க/இக்ரா மு.ம.வி.
உலப்பனை



எப். சஹ்லா
மன்/ எருக்கலம்பிட்டி ம.ம.வி.
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது..

## Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!

### "தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான உசாத்துணை நூல்கள்"





**இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..**

நியாயமான விலைகளில் தரமானவைகள்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.

அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.

புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**YOU RING! WE BRING!**

**FREE HOME DELIVERY SERVICE**

City Limits Only / Conditions Apply

Designed by Mufariz JM

For your complete and competitive books & stationery shopping experiences..

**ISLAMIC BOOK HOUSE**

IBH

77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.

Tel: 2684851, 2669197, Fax: 0112688102 Hot Line 011 5 925 935

E-Mail ibhinfo77@gmail.com Web: www.ibh.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org